விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 25 வெள்ளிக்கிழமை (08.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மக்களின் பிரச்சினைகள் குறித்தே

# அரசுடன் கூட்டமைப்பு பேசியது

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரச பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்தே அதிகம் பேசப்பட்டது. அரசியல் பிரச்சினைகள் குறித்து எதுவும் பேசப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறினார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

(கொழும்பு)

அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையை மனித உரிமை மீறல் என அமெரிக்கா குற்றம்சாட்டுவதை ஒருபோதும் ஏற்க முடியாதென அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மறுத்துரைத்துள்ளார்.

புலிகள் இயக்கம் அவர்களின் இனத்து மக்கள் மத்தியிலேயே மனித உரிமை மீறல்களை மேற்கொண்டது. இதன்போது அதற்கு எதிராக (20ஆம் பக்கம் பார்க்க)

## உதவி அரச அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகமாக தரமுயரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை பிரதேச செயலகங்களாக தரமுயர்த்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்னவின் ஆலோசனைக்கு அமைவாக குறிப்பிட்ட மாவட் (20ஆம் பக்கம் பார்க்க)

# பிளேக்கை சந்தித்துப்பேச ஜனாதிபதி மகிந்த மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்திப்பதற்கு தாம் தயாரில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் தொனியில் மறுத்துள்ளார்.

அண்மைக் காலமாக இலங்கை தொடர்பாக றொபேட் ஓ பிளேக் எதிர்மறையான கருத்துகளை வெளியிட்டு வருவதும் அண்மையில் உலகத் தமிழர் பேரவையின் முக்கியஸ்தர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடியதுமே ஜனாதிபதியின் கோபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

அதன் காரணமாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள றொபேட் ஓ பிளேக்கைச் சந்திப்பதற்கு தான் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானில் மீண்டும் பாரிய பூகம்பம்

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்றிரவு 7.1 ரிச்டர் அளவுடைய பூகம்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது. மியாகி பிராந்தியத்தில் கடலுக்கடியில் 25 மீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுபெற்ற முன்னாள் புலிகள் சிலர் மீண்டும் கைதாகியுள்ளனர்!



### பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டதாக கிடைத்த தகவல்களையடுத்து அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை அவர் குறிப்பிடவில்லை. நாடாளுமன்றத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபையை எதிர்க்க ஆளும் தரப்பு முயற்சிக்கிறது

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ.நா.சபையை எதிர்ப்பதற்கு ஆளும் தரப்பினர் முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் அரசியல் ரீதியான நியமனங்களை வழங்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை கோரியுள்ளது. இத்தகையவர்களால் நுட்பமான இராஜதந்திர விவகாரங்களை கையாள்வதற்கு முடியாது என அக்கட்சி கூறியுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று அவசரகால நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் சிரேஷ்ட உபதலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு கோரினார்.

மனித உரிமை (20ஆம் பக்கம் பார்க்க)




# மகாவம்சத்தில் ஜனாதிபதி மகிந்த

மகாவம்சத்தின் புதிய வெளியீட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்று அத்தியாயங்கள் ஒதுக்கப்படவுள்ளன என இலங்கை கலாசார விவகார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

கி.மு. 543-ல் விஜயன் இலங்கைக்கு வந்தது முதல் மகாசேனன் மன்னனின் ஆட்சிக் காலம் வரை மகாவம்சம் விபரிக்கிறது. அதனுடன் இணைக்கப்பட்ட குலவம்சம் மற்றும் சூலவம்சம் ஆகியவை (20ஆம் பக்கம் பார்க்க)



**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until April 30th 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# சர்வதேச சட்டங்களை அரசு மீறவில்லை!

இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்களை மீறிச் செயற்படவில்லை என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய முனைப்பு காட்டத் தவறியுள்ளதாக சில சர்வதேச தொண்டு நிறுவனங்கள் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதே மனித உரிமை சட்டங்களுக்கு முரணான வகையில் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்ததில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சிறந்த கொள்கைகளை பின்பற்றி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலவசமாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# சீ-நோர் தொழிற்சாலையை நோர்த்சீயுடன் இணைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சீ-நோர் மீன்பிடி வலைத் தொழிற்சாலைகளை நோர்த்சீ நிறுவனத்துடன் இணைப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

குருநகரில் அமைந்துள்ள நோர்த்சீ லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக்கூட்டம் இன்று இடம் பெறுவதனைத் தொடர்ந்து, இலங்கையின் முன்னணி மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனமான, மீன்பிடி மற்றும் நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் சீ-நோர் லிமிடெட்டின் கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள லுனுவில மற்றும் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள வீரவில ஆகிய வலை உற்பத்தித் தொழிற்சாலைகளை, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் நோர்த்சீ லிமிடெட்டுடன் இணைப்பது தொடர்பான இறுதி தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாக உதவித் தொழில் ஆணையாளர் மற்றும் இரு தொழிற்சாலைகளினதும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனுமான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது என நோர்த்சீ லிமிட்டெட்டின் பிரதிப் பொது முகாமையாளர் எவ்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# லங்கா ஈ நியூஸ் இணையத்தின் செய்தி ஆசிரியர் நேற்று விடுதலை

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியர் பென்னட் ரூபசிங்க நேற்று கடுவெல நீதிமன்ற நீதிபதியால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் மூன்று இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் கடுவெல நீதிமன்ற நீதிபதியால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தக் கூடாது எனவும் கடுவெல நீதிமன்ற நீதிபதி ஜே.டி.அல்விஸ் இவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் இவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் ஏழாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலபேயிலுள்ள லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரின் சகோதரரை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதேவேளை லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியர் பென்னட் ரூபசிங்கவை விடுதலை செய்யுமாறு கடுவெல நீதிமன்றத்தின் முன்பாக நேற்று ஊடக அமைப்புகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஊடக அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா உட்பட அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ச-5)

# மீசாலையில் பெண் படுகொலை சந்தேக நபர்களில் ஒருவர் கொழும்பில் வைத்து கைது!

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் கடந்த மார்ச் 6ஆம் திகதி கனடாவில் இருந்து வந்தவர் எனக் கூறப்படுபவரால் முன்னாள் மனைவி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த கூலிப் படை கொலையாளி கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவில் இருந்து இலங்கை திரும்பிய இந்த நபர் தன்னிடம் இருந்து பிரிந்து குழந்தையுடன் மீசாலையில் வாழ்ந்து வந்த தன் மனைவியினை வவுனியாவில் இருந்து கூலிக்கு அமர்த்திச் செல்லப்பட்ட நபர்கள் ஊடாக கொலை செய்து சடலத்தை பற்றைக்குள் வீசியிருந்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இந்த கொலைச் சம்பவத்தை அடுத்து கொலைக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்துடன் கொல்லப்பட்ட பெண்ணின் முன்னாள் கணவன், வாகன சாரதி, முன்னாள் கணவனுடன் உறவு வைத்திருந்த பெண் ஆகியோர் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

இந் நிலையில் ஒருவர் கொழும்பில் வெள்ளவத்தை விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உள்ளார். கைதான உதயகுமார் பிரசன்னா என்ற கொலைச் சந்தேக நபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார். (ச-5)

# காணாமற்போன கடற்படையினரின் சடலங்கள் வடமராட்சி கடற்பரப்பில்?

அண்மையில் காணாமற்போன கடற்படையினர் நால்வரின் சடலங்களை வடமராட்சி கடற்பரப்பில் தாங்கள் கண்ணுற்றதாக மீனவர்கள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆறு நாட்களுக்கு முன் மர்மமான முறையில் நான்கு கடற்படை வீரர்கள் காணமற்போயிருந்தனர். அவர்களைத் தேடும் பணியை கடற்படை தீவிரமாக முடுக்கி விட்டிருந்தது. ஆயினும் அவர்களைப் பற்றிய எதுவித தகவலையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அதேநேரம் அவர்கள் பயணித்த படகு அதில் இருந்த ஆயுதங்களுடன் நான்கு நாட்களுக்கு முன் எதுவித சேதமுமின்றி கரையொதுங்கியிருந்தது.

அவ்வாறான நிலையிலேயே பிரஸ்தாப கடற்படை வீரர்கள் நால்வரினதும் சடலங்களை தாம் வடமராட்சிக் கிழக்கு கடற்பிரதேசத்தில் கண்ணுற்றதாக அப்பிரதேச மீனவர்கள் அறிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆயினும் அதன் உண்மைத் தன்மை குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை. (ச-5)

**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு:-
0777393158
(சி-2883)

# விபத்தில் மாணவி காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் மாணவி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 6ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் அராலி இந்துக்கல்லூரிக் கருகில் இடம்பெற்றுள்ளது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த யோகநாதன் விதுஷா (வயது-16) என்ற மாணவியே படுகாயமடைந்தவராவார். (ச-6)

**BRIGHT INN**




51, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel - 021-2221889
021-4922334
A/C & Non A/C Rooms Available.
- மேலைத்தேய கீழைத்தேய உணவு வகைகளை பெற்றுக் கொள்ளலாம்
- திருமண, பிறந்தநாள் வைபவங்களுக்கான உணவு வகைகள் ஓடரிற்கு செய்து கொடுக்கப்படும்
- Take away (ஓடர்கள் வீட்டிற்கு கொண்டுவந்துதரப்படும்)
(சி-2882)

**வீடு வாடகைக்கு**

Chundukuli, கச்சேரிக்கு அருகாமையில் தனி வழிப் பாதையுடன் Large room, Varanda, Toilet வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
பெண்பிள்ளைகள், தாயும் மகளும் விரும்பத்தக்கது.
Tel :- 0750828308, 0715360865
(4417)

**விரைவான UK Student Visa இற்கு**

புதிய நடைமுறைக்கு முன்னதாக O/ Level English இல் 'C' உடன் UK செல்ல நாடுங்கள்.
Thames International
644,Hospital Road, Jaffna.
0750422108,0115737306,
0717943439
(4430)

A/L பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியடைந்துள்ளீர்களா?
மூன்று வருடங்களில் நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்
External Degree South Eastern University of Sri Lanka
**BBA, B.Com & BA**
தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்
விரிவுரைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் சனி அல்லது ஞாயிறு தினத்தில் நடைபெறும்
KANDY - COLOMBO - KURUNEGALA
HATTON - NUWARA ELIYA
PUTTALAM - VAVUNIYA - TRINCOMALEE
ஆகிய கற்கை நிலையங்களில் பாடநெறியைத் தொடரலாம்
03 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வெளிவாரிப்பட்டப்படிப்பைத் தொடர்வதற்கான இறுதி சந்தர்ப்பம் இவ்வருடம் மட்டுமே!
அனைத்து கற்கை நிலையங்களுக்குமான பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்.
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
FOR DETAILS 0777 71 71 29 0718 57 07 09
GOLDEN COLLEGE
No.23, Suduhumpola Road, Kandy. Tel: 081 2205544 / 0777 912597

# நன்றி நவிலல்

கடந்த 05.04.2011 இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் செய்தி கேட்டு தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரையும் எம்முடன் பகிர்ந்து கொண்ட இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர், கிளை முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
(சி-2891)

# இன்று ஒரு தகவல்

## நெப்போலியன்

நெப்போலியன் தன்னுடைய வெள்ளைக் குதிரையில் உட்கார்ந்து கொண்டே தூங்குவாராம்.

இதைக்கேள்விப்படும் போது, "அதெப்படி முடியும்? பெரும் ஆபத்தல்லவா? தவறிக்கீழே விழுந்தால் என்னாவது? நிறைய கடமைகள் காத்துக் கொண் டிருக்கும் நிலையில் நிம்மதியாக அவரால் எப்படித் தூங்க முடிந்தது?" என்று கேட்கத் தோன்றுகிற தல்லவா!

இதற்கு நெப்போலியன் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

"புறாக்கூண்டில் வரிசையாக அறைகள் இருப்பதைப் போன்று என் மூளையில் கடமைகளை வரிசையாக அடுக்கி வைத்திருப்பேன். எந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமோ அந்தக் கடமை இருக்கும் அறைக்கதவை அப்போதைக்குத் திறப்பேன். அதைப் பற்றி மட்டும்தான் யோசனை செய்வேன். மற்றக் கடமைகள் இருக்கும் அறைக்கதவையெல்லாம் மூடி விடுவேன். அதைப்பற்றி எதுவும் யோசிப்பதில்லை.

"ஆதலால் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நான் குழப்பம் அடைவதில்லை. வீணான எண்ணங்களுக்கு என்மனதில் இடமும் இல்லை. தூங்க வேண்டும் என்று நினைக்கும்போது நான் எல்லாச் சிந்தனை அறைகளையும் மூடி விடுவேன். உடனே தூங்கி விடுவேன்." என்று தன்னைப் பற்றிய ஒரு குறிப்பில் நெப்போலியன் தெரிவித்திருக்கிறார்.

சிறு வயதில் நெப்போலியன் ஒரு இராணுவ விடுதியில் படித்து வந்தார். அச்சமயம் அவருடன் அதே அறையில் தங்கியிருந்த இன்னொரு மாணவனுடைய அழகான பை ஒன்று காணாமல் போய் விட்டது. உடனே அந்தப்பையன் அதைப்பற்றி மேலதிகாரியிடம் புகார் செய்தான்.

அவனிடம் மேலதிகாரி, "உனக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன் "எனக்கு நெப்போலியன் மீதுதான் சந்தேகம்" என்றார்.

உடனே அந்த அதிகாரி நெப்போலியனை தன் அறைக்குள் அழைத்தார். எதுவுமே விசாரிக்காமல் கம்பினால் கண்மண் தெரியாமல் அடித்தார்.

"ஏன் திருடினாய் இனிமேல் அப்படிச் செய்வாயா?" என்று கேட்டபடியே அதிகாரி நெப்போலியனை பலமாக அடித்து விட்டார். அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு நெப்போலியன் அமைதியாக இருந்தார். எதுவும் பேசவில்லை.

சில நாட்களுக்குப் பின் புகார் செய்த மாணவன் அதிகாரியிடம் ஓடிவந்து, "ஐயா... என் பையை அன்றைக்குத் திருடியது நெப்போலியன் இல்லை. வேறு ஒருவன். இப்போதுதான் எனக்கு உண்மை தெரிந்தது. தெரியாமல் நெப்போலியன் மீது புகார் செய்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று தெரிவித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் ஆசிரியருக்கு மிகவும் ஆச்சரியமாகி விட்டது. உடனே அவர் நெப்போலினைக் கூப்பிட்டு 'ஏன்தம்பி, உனக்கு என்ன பைத்தியமா? நீ என்ன முட்டாளா? அன்றைய தினம் உன்னை அந்த அடி அடித்தேன். அப்போதே நீ உண்மையைச் சொல்லியிருக்க வேண்டியது தானே?" என்று கேட்டார்.

அதற்கு நெப்போலியன் "ஐயா, நீங்கள் என்னை அடிக்கும் முன்பே கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். அடித்துக் கொண்டே கேட்டீர்கள்.

நான் இல்லை என்று சொல்லியிருந்தால் அடிக்குப் பயந்து நான் அப்படிச் சொன்னதாக நினைத்திருப்பீர்கள். நான் பயந்ததாக யாரும் நினைக்கக் கூடாது. அதை விட அடி வாங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை "என்றான்.

நெப்போலியன் சொன்ன பதிலைக் கேட்டு அதிகாரி அப்படியே அசந்து விட்டார். தான் பயந்ததாகக் கூட யாரும் நினைக்கக் கூடாது என்று நெப்போலியன் நினைத்திருக்கிறார் என்றால், அதற்கு அவரிடம் எவ்வளவு மனோதிடம் இருக்கவேண்டும்?

நெப்போலியனின் வீரத்தையும் துணிவையும் சுவாமி விவேகானந்தர் பெரிதும் பாராட்டி பேசியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 'கடவுள் வடித்த கண்ணீர்' திருப்பாடுகளின் காட்சி

## ஏப்ரல் 12 இல் ஆரம்பம்

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான கடவுள் வடித்த கண்ணீர் என்னும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக்கலா மன்ற அரங்கில் ஆரம்பமாகி தொடர்ந்து 17 ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். 14 ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினமாதலால் அன்றைய தினம் ஆற்றுகை இடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்று நடிக்கின்ற இவ்வாற்றுகைக்காக கடந்த ஆண்டுகளைப் போல் இம் முறையும் 150 அடி நிளமான விசேட மேடை அமைக்கப் பட்டுவருகின்றது. திரு மறைக் கலாமன்ற இயக்குனர் அருள் திருநீமரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இவ்வாற்றுகைக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோ.யோண்சன் ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்கிறார். இதற்கான இசையமைப்பை இசைத்தென்றல் ம.யேசுதாசன் வழங்கவுள்ளார்.

திருமறைக்கலாமன்றம் 1963 ஆம் ஆண்டு முதல் திருப்பாடு மேடையேற்றி வருகின்றது. இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்றினை ஒவ்வொரு ஆண்டும் அக்காலத்தின் சமூகச் சூழலுடன் இணைத்து தயாரிப்பதால் இவ்வாற்றுகை ஆழ்ந்த அர்த்தம் பொதிந்ததாக அமைவதுடன் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறஇருப்பதனால் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்குமென யாழ். பிரதேச மின் பொறியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக அ. கனகரத்தினம், உப தலைவராக பொன். தில்லைநாதன், செயலாளராக சி.பெருமாள், உப செயலாளராக எஸ்.எஸ் சின்னத்தம்பி, பொருளாளராக சி.சந்திரராசா, கணக்குப் பரிசோதகராக எஸ்.சின்னத்துரை ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கிளி. மாவட்ட செயலக பிரதம கணக்காளரும் தெரிவு செய்யப் பட்டனர். (ஸ்ரீ-3-84)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 90 |
| தக்காளி | 80 | 100 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 40 | 100 | 70 |
| கரட் | 120 | 200 | 140 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 30 | 50 | 50 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | - | 80 | 60 |
| பாகற்காய் | 60-70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 80 |
| பயற்றங்காய் | 50-60 | 60 | 100 |
| லீக்ஸ் | 100-120 | 120 | 110 |
| பீற்றூட் | 45 | 50 | 50 |
| கறிமிளகாய் | 120 | 130 | 130 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 450 |
| போஞ்சி | - | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 12 | 30 | 25 |
| தேசிக்காய் | 60-70 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# இராசி பலன்

*08.04.2011*
*(பங்குனி 25, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.07மணிக்கு*
*பஞ்சமி பின்னிரவு 2.21 மணிவரை*
*ரோகினி முன்னிரவு 11.50 மணிவரை*
*இராகுகாலம் 10.37-12.07 மணிவரை*
*சுபநேரம் 6.07-7.37 மணிவரை*

**மேடம்** துணிவும் தன்னம்பிக்கையும் உயரும், மனதிற்கினிய செய்திகள் இல்லம் தேடிவரலாம், தொழிலில் முன்னேற்றம் காணப்படும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், உறவினர் ஒருவரை நீண்ட நாட்களின்பின் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதி கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**மிதுனம்** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடிய பொறுப்புக்களால் அதிகம் பாடுபடவேண்டி வரலாம்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும் நாள், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், விலையுயர்ந்த பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், சொன்ன சொல்லைக்காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** புத்திசாதுரியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், போசன சுகமுண்டு.

**துலாம்** விட்டுக் கொடுத்துச் செல்வதால் வெற்றி காண்பீர்கள், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் வருத்தமடைய நேரிடும், பிரயாணங்களில் விழிப்புணர்ச்சி தேவை.

**விருச்சிகம்** நண்பர்களுக்காகச் செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு உயரும்.

**தனுசு** பழைய கடன் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தடைகள் உயரும் நாள்.

**மகரம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், தொலைபேசி மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், இழுபறியாக இருந்த பிணக்குகள் நல்ல படியாக முடியும், பொருளாதார நிலை உயரும், சுவாரஸ்யமான நாள்.

வளவன்

# வேலையற்ற பட்டதாரிகளை ஈடுபடுத்தி சுகநல சங்கம் உருவாக்கப்பட வேண்டும்

## டாக்டர் யமுனானந்தா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஒருங்கிணைந்த சுகநல சங்கம் உருவாக்கப்படவேண்டும் எனவும் இதனை பதவி வழியில்லாத இளைஞர்கள் பொறுப்பேற்று நடத்த வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு பொது சுகாதாரப் பரிசோதக மாணவர்களால் தொற்று நோய்களையும் தொற்றாத நோய்களையும் அறிந்து கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார விழிப்புணர்வுக் கையேடு நேற்று முன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வெளியிடப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பல்லாயிரக்கணக்கானோர் வேலையற்ற பட்டதாரிகளாக நாட்டிலுள்ளனர். இவர்களிடம் இவ்வாறான பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்த முடிவதோடு வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தவும் முடியும்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் காசநோய் தடுப்புச் சங்கம், புற்றுநோய் சங்கம், உளநலச் சங்கம், முதலுதவிச் சங்கம், விழி, செவிப்புலச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் வைத்திய நலன்புரிச் சங்கங்கள் எனப் பல அமைப்புக்கள் இருந்தும் அவை செயலிழந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

இதேவேளை தோற்றுநோய்கள் பற்றிய விழிப்புணர்வு சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து உளநோய் மற்றம் விசேட தேவை உடையவர்களுக்கான நலன்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

பார்வைப்புலன், செவிப்புலன், உடல் அங்கவீனம் என்பவற்றுக்கான உதவிகளை சரியான முறையில் மேற்கொள்ளவேண்டும்.


எனவே வேலையற்ற பட்டதாரிகளை ஒருங்கிணைத்து எமது இனத்தின் எதிர்கால நலனிற்காக சிறந்த மாவட்ட சுகநலச் சங்கத்தினை உருவாக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்

ஜோர்ச் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்திற்கான யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக அணி 20 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திலும், கே.சீ.சீ.சீ. கழக அணி 13 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்திலும், ஸ்கந்தா ஸ்ரார், சிறி காமாட்சிக் கழக அணிகள் தலா 10 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் கழக அணி 8 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்திலும், மானிப்பாய் பரிஸ், சென்றலைட்ஸ், யூனியன்ஸ், கிறாஸ் கொப்பஸ், பற்றீசியன்ஸ் கழக அணிகள் தலா 5 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும் உள்ளன. மேற்கூறப்பட்ட புள்ளிகளின் விபரம் 03.04.2011 வரை நடைபெற்ற போட்டிகளிலிருந்து பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பண்பாட்டின் உயிர்விசைகளாக மாணவர்கள் மலர வேண்டும்

## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரை



(யாழ்ப்பாணம்)

உலகளாவிய விளையாட்டுக்களில் சாதனை படைக்கின்ற அதேவேளை சுதேச விளையாட்டுக்களை உலக அரங்கில் முதன்மை பெறச் செய்யவேண்டும். அண்மையில்கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அலகின் வருடாந்த விருது வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சமூகவியல் துறைப் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளித்தட்டு விளையாட்டினை பல்கலைக் கழக விளையாட்டுத்துறையில் அறிமுகம் செய்து அதன் தொடக்ககாலப் பொறுப்பாளராகவும் தான் கடமை புரிந்த நாட்களை நினைவு கூர்ந்ததுடன் நலமானதொரு சமுதாயத்தின் உயிர்விசைகளாக விளங்குகின்ற சாதனை புரிந்த மாணவர்களையும் பாராட்டினார்.

உடல், உள்ளம், ஆத்மா ஆகிய அனைத்து தளங்களிலும் மேம்பாட்டினைத் தருகின்ற விளையாட்டுத் துறையினை சாதனைக் களமாக மட்டுமன்றி அறிவார்ந்த ஒரு பட்டத்திற்கான கற்கை நெறியாகவும் காணும் எங்களின் நெடுநாள் கனவு மெய்ப்படக் காலம் கனிந்துள்ளமையினையும் இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அதற்கான திட்ட வரைவு மானியங்கள் ஆணைக்குழுவின் சாதகமான பரிசீலணையில் உள்ளது. இந்தக் கலைத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் அனைவரும் ஈடுபாட்டுடன் ஒன்றுபடுதல் இன்றியமையாதது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# அவசரகால நிலைமை நீடிப்பு


(கொழும்பு)


அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

இது தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது அதற்கு ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன எதிராக வாக்களித்தன. (ச-5)

# மலிங்கவை கட்டியணைத்து முத்தமிட ஆவல்; நடிகை அமீஷா





(மும்பை)

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்காவை சந்தித்து கட்டியணைத்து முத்தமிட ஆவலாக இருப்ப தாக பொலிவூட் நடிகை அமீஷா பட்டேல் தெரி வித்துள்ளார்.

மிட்-டே எனும் இணையத்தளத்திற்கு மாலிங்க தொடர்பாக அவர் கூறுகையில், அவரை நான் விரும்புகின்றேன்.அவரைச் சந்தித்து கட்டியணைத்து முத்தமிடுவதற்காக நான் செத்துக்கொண்டிருக்கின்றேன்.அவர் மிக சுவாரஷ்யமானவரும் சம்பிரதாயமற்ற வரும் ஆவார் எனக் கூறியுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி மும்பையில் நடை பெற்ற இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண இறுதிப்போட்டியை நேரில் பார்வையிடும் பெரும் எண்ணிக்கையிலான பொலிவூட் நட்சத்திரங்களில் அமிஷா பட்டேலும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட சிறுவன் தப்பியோட்டம்

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 13வயதுச் சிறுவன் ஒருவன் வவுனியாவிலிருந்து தப்பிவந்துள்ளார். டிலக்ஷன் என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டவராவார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டிற்கு அருகிலிருந்த கடைக்குச் சென்ற வேளை இனந்தெரியாதவர்களால் இவர் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட டிலக்ஷன் வவுனியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட வேளை கடத்தியவர்கள் அப்பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்தவேளை இவர் தப்பியோடியுள்ளார். அப்பகுதியிலுள்ள பொது மக்கள் மூலம் வவுனியா காவல்துறையினரிடம் சரணடைந்த அவர் நேற்று குடும்பத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-5)



யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வின் மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், போட்டியில் கலந்துகொண்ட வீரர்களையும் படங்களில் காணலாம்.



வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் திருமதி.மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச அமைப்பாளர் அன்பு ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள். போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் இரண்டாம்இடத்தைப்பெற்ற மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் என்பவற்றிக்கு வெற்றிக்கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# நல்லூர் கோட்ட மட்ட தமிழ் மொழித்தின எழுத்தாக்கம், சித்திர போட்டி முடிவுகள்

நல்லூர் கோட்டமட்ட தமிழ்மொழித்தினப் போட்டியின் எழுத்தாக்கம் மற்றும் சித்திரப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் எழுத்தாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம்

**பிரிவு 1 ஆக்கம் எழுத்து**

சி.மானாமிர்தன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),கி.யதுஷிகா(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை),க.சுடரோன்(நல்லூர் சென் பெனடிக் றோ.க.பா).

**பிரிவு 2 கட்டுரை வரைதல்**

ஐ.அனித்தன்(நாயன்மார்கட்டு மகேஸ் வரி வி), ரா.யுவரூபன்(கோண்டாவில் இராம கிருஷ்ணா), ம.சங்கீர்த்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**பிரிவு 3 கட்டுரை வரைதல்**

க.சுரற்றிகா(கோண்டாவில் இராம கிருஷ்ணா),ர.வித்தகன்(யாழ்.இந்துக் கல்லூரி), சி.டினோஜன்(நல்லூர் இந்து த.பெ.பாட).

**பிரிவு 4 கட்டுரை வரைதல்**

**இலக்கியம் நயத்தல்**

பா.றாயினி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜெ.சிந்துஜா(செங்குந்தா இந்துக் கல்லூரி), இ.சங்கீர்த்தன்(யாழ்.இந்துக் கல்லூரி).

**பிரிவு 4 இலக்கணப் போட்டி**

பே.டினேஷன்(யாழ்.இந்துக் கல்லூரி), ப.சுதர்சன்(இளையதம்பி இந்து வித்), சி.பவோஜன்(கோண்டாவில் இந்து மகா வித்).

**பிரிவு-4 குறுநாடக ஆக்கம்**

பு.தனுசங்சகர்(கொக்குவில் இந்துக் கல்லூரி, த.டினோஷா(முத்துத்தம்பி மகா வித்தி, சி.தமிழினி(அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி).

**பிரிவு 4 கவிதை ஆக்கம்**

பா.போதநிலாஞ்சலி(நல்லூர் இந்து த.பெ.பாட), பு.நிசாந்தினி(கோண்டாவில் இராமகிருஷ்ணாம.வி), ரா.அறிவழகி (முத்துத்தம்பி மகா வித்தி).

**பிரிவு 4 சிறுகதை ஆக்கம்**

ச.தனஞ்செயன்(யாழ்.இந்துக் கல்லூரி), கு.லக்சனா(கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி), ம.கார்த்திகா(இளையதம்பி இந்து வித்தி).

**பிரிவு 5 கட்டுரை வரைதல்**

**இலக்கியம் நயத்தல்**

த.அம்ஷத்வனி(கனகரத்தினம் ம.ம.வித்), இ.ஹினு(யாழ்.இந்துக் கல்லூரி), கு.கார்த்திகா(செங்குந்தா இந்துக் கல்லூரி).

**பிரிவு 5 இலக்கணப் போட்டி**

த.ஹேமா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இ.பிரணவன்(யாழ்.இந்துகல்லூரி), சி.யமிலா (கனகரட்ணம் ம.ம.வித்).

**பிரிவு 5 குறுநாடக ஆக்கம்**

பு.மீரா(செங்குந்தா இந்துக் கல்லூரி), ரு.உஷாலினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கு.குகப்பிரியா (கொக்குவில் இந்துக் கல் லூரி).

**பிரிவு 5 கவிதை ஆக்கம்**

ஜி.சஜீகன் (யாழ்.இந்துக் கல்லூரி), த.தாரணி (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), த.அமீரா (கோண்டாவில் இராமகிருஷ்ணா)

**பிரிவு 5 சிறுகதை ஆக்கம்**

கி.மனோரதி (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), சி.சுகுமாரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.றஜினா (செங்குந்த இந்துக் கல் லூரி)

**பிரிவு 5 திறனாய்வுப் போட்டி**

ந.கௌதமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

சித்திரப் போட்டியில் முதல் 5 இடங் களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**தரம்-1**

அ.வேணுஜன் (கொக்குவில் ஸ்தான சீ.சீ. த.க.பா), ர.சரணிகன் (பெரியபுலம் ம.வி), இ.துஷ்யந்தி (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சி.கஜாகினி (யாழ்.இந்துஆரம்பப் பாடசாலை), வீ.கிருத்திகா ( கல்வியங்காடு இ.த.க.பா)

**தரம்-2**

இ.தஷிகா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),கபிலன் (நல்லூர் சென் பெனடிக் றோ.க.த.க.பா), நி.திவ்யா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சு.மதுஷாந் (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தி), ம.தேனுஜா (கோண்டாவில் றோ.க.த.க.பா)

**தரம்-3**

செ.பவித்திரா(யாழ்.இந்துஆரம்பப் பாடசாலை),கு.திவேதிகா( அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), சூ.துஷாயினி (நல்லூர் சென் பெனடிக் றோ.க.த.க.பா), க.வழுதி (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி), ர.லத் திக்கா(கொக்குவில் இராமகிருஷ்ண வித்தி,

**தரம்-4**

பா.ரிஷிகேஸ்வர்(ஆனைப்பந்தி மெ.மி. வி), க.மனோஜ்காந்த்(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ச.தனுர்வித்தியா (கொக்குவில் ஸ்தான சீ.சீ.த.க.பா),பி.நிவோஜினி (யாழ். இந்துஆரம்பப் பாடசாலை), பி.சாருகான் (கோண்டாவில் இந்து மகாவித்தி)

**தரம்-5**

சு.மாதங்கி( கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), அ.பவித்திரா (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தி,வ.றொஜன் றெஜினோஸ் (நல்லூர் ஆனந்த வித்தியாலயம்), ச.நிலுத் தியா (வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தி), சி.சயூறி (திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை). (ஸ்ரீ-3)

# பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பேருந்துக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக எண்ணெய் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து எரிபொருள் விலை அதிகரித்துள்ளது.

எனினும் அதற்காக வேண்டி பேருந்து கட்டணம் உடனடியாக அதிகரிக்கப்பட மாட்டாது. இன்னும் சில தினங்களில் எண்ணெய் விலை குறையலாம். அதன் பின்னர் நிலைமை சுமுக நிலைக்குத் திரும்பிவிடும்.

பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு கொள்கை முறையில் எத்தனையோ நடவடிக்கைகள் உள்ளன. அதன் பிரகாரமே பேருந்துக் கட்டணம் அதிகரிக்கச் செய்யப் படும்.

எனவே தற்போதைக்கு பேருந்து கட்டணத்தை அதிகரிக்கச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கருதுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)






யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் முத்தமிழ் விழா நேற்று முன்தினம் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் மு.மகேந்திரன் உரையாற்றுவதனையும் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.கரன்)

## ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீக தியான உரையாடல்

ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீக தியான உரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆன்மீகச் சிந்தனை மூலம் செவி வழி தொடு சிகிச்சை பற்றிய விளக்கவுரை இறுவட்டு மூலம் பக்தர்களுக்கு காண்பிக்கப்படவுள்ளதால் தீராத நோய்களினால் பாதிப்படைந்தவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு பிரார்த்தனை மையத்தினர் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

## பூம்புகார் அ.த.க. பாடசாலை 3.3 மில். ரூபாய் செலவில் புனரமைப்பு

பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 3.3 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த மேற்படி பாடசாலை இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதையடுத்து புனரமைக்கப்படுகிறது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-51)

## யாழ்.செய்திகள்

## பேச்சுப் போட்டி

(மருதங்கேணி)

யாழ்.பட்டிமன்றக் குழு யாழ்.மாவட்டத்தில் பேச்சுத்துறையை வளர்க்கும் நோக்குடன் பேச்சுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டி திறந்த போட்டியாக நடைபெறவுள்ளது. இதில் எவரும் பங்குபற்றலாம். இதன் தலைப்பு பேச்சுப் போட்டி நடைபெறும் இடத்தில் வைத்து வழங்கப்படும். இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை தலைவர், யாழ். பட்டிமன்றக் குழு, 5/2, வைமன் வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-35)

## இன்னிசைக் கச்சேரி

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் ***இன்னிசைக் கச்சேரி*** பக்கவாத்திய சகிதம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-35)

# உடுவில் பிரதேச செயலகத்தால் வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

தாவடி தெற்கு காளி கோயில் பகுதியிலுள்ள பொன்னையா வீதி மற்றும் மோகன் வீதி ஆகியவை உடுவில் பிரதேச செயலகத்தால் புனரமைக்கப்படவுள்ளது.

மேற்படி வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

எனவே அப்பகுதி சனசமூக நிலையங்கள், கோயில் நிர்வாகத்தினர், மாதர் அமைப்பினர் ஆகியோர் இணைந்து மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தமையையடுத்து இந்நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஸ்ரீ-3-51)

# அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டிகள்

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் அமரர் செம்பியன்செல்வன் ஞாபகார்த்த போட்டி எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இப்போட்டிக்கான சிறுகதைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் ஞானம் கிளை அலுவலகம், 3B, 46வது ஒழுங்கை, கொழும்பு-06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டுவோரில் முதலாம் இடத்தினைப் பெறுபவருக்கு 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்திற்கு 3 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் இடத்திற்கு 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

ஏனைய 9 சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

# பருத்தித்துறை மாவட்ட சாரணர் விளையாட்டு விழா

(அல்வாய்)

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட மட்ட சாரணர் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை 3 மணிக்கு பருத்தித்துறை கிக்கமுனை மைதானத்தில் மாவட்ட சாரண ஆணையாளர் மு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளரும் நிபுணத்துவ ஆலோசகருமான இராணிச் சாரணர் ந. ஆனந்தராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வக்குமரன், வடமாகாண சாரண ஆணையாளர் என்.போஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் என். ரவீந்திரன், யாழ்ப்பாண மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.செபஸ்ரியாம்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# வடமராட்சி வடக்கு பிரதேச விளையாட்டு விழா ஆரம்பம்

வடமராட்சி வடக்குப் பிரதேச விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சு.கணேசராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

புலோலியூர் சதாசிவம் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

சாம்பசிவம் அகிலேஸ்வரன் (கனடா), எஸ்.பி.கிருஷ்ணன் (கண்டி வீதி, யாழ்ப்பாணம்), திருமதி கார்த்திகாயினி சுபோஸ் (கொழும்பு-15)

மேலும் 6 சிறுகதைகள் ஆறுதல் பரிசிற்குத் தெரிவாகியுள்ளன. (ஸ்ரீ-3-51)

## செயலமர்வுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் 2011ஆம் ஆண்டுக்கான இரசாயனவியல் மாதிரி வினாத்தாள் புத்தகத்தையும் எடுத்து வருமாறு வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

☆☆☆

(அல்வாய்)

வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 10, 11 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் இலத்திரனியல் தொடர்பான பாட விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே, இதற்கு வரும்போது தரம் 10,11 விஞ்ஞான பாடப் புத்தகங்களையும் எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

☆☆☆

வடமராட்சி வலயத்தில் தரம் 9இல் வரலாற்றுப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாட செயற்றிட்டத்திற்கான மதிப்பீட்டு வினாத்தாள்கள் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு வருகைதரும் ஆசிரியர்கள் தரம் 9 வரலாற்றுப் பாடநூல் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டி, பழைய வினாத்தாள்கள், தேவையான படங்கள் ஆகியவற்றைத் தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)



யா/ கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் குழுத்தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் உரையாற்றுவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யாழ்.மரியன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி எவ்.எல்.என் குரூஸ் சான்றிழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வித்தகபுரம் பகுதியில் மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் அவலம்

## விஜயகலா எம்.பி.யிடம் முறையீடு

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வித்தகபுரம் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் முறையிட்டுள்ளனர்.

குடி நீர், மலசலகூடம் மற்றும் குடியிருப்பு வசதியின்றி பெரும் கஷ்டங்களை தாம் அனுபவித்து வருவதாகவும் இதனால் அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்று முன்தினம் கொல்லன்கலட்டி வித்தகபுரம் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் மீள்குடியேற்றப்பட்ட 59 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். மீள்குடியேற்றப்பட்ட எமக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. 5 ஆயிரம் ரூபா பணம் மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளமையினால் புதிய குடியிருப்புக்களை அமைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குடிப்பதற்கு குடிநீர் வசதி இல்லை. பவுசர் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றபோதிலும் அது உரிய வகையில் கிடைப்பதில்லை. மலசல கூடங்கள் இல்லாமையினால் இயற்கைக் கடன்களை கழிப்பதற்கு பெரும் கஷ்டப்பட வேண்டிய சூழல் காணப்படுகிறது.

இதனால் பொதுமலசல கூடங்களை அமைப்பதற்கும் இராணுவக் கட்டுப்பாட்டில் காணப்படும் நல்ல தண்ணீர் கிணறினை மீட்டு அதனை புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனைவிட குடிமனையினை சிறியளவில் அமைப்பதற்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபா நிதி தேவைப்படுகின்றது. எனவே, இதனை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் விஜய கலா மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.இந்த விடயங்கள் குறித்து யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துரு சிங்கவுடனும் அரச தரப்பினருடனும் பேசி உரிய நடவடிக்கை எடுக் கப்படும் என்று இந் தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் உறுதியளித்துள்ளார்.

கொல்லன் கலட்டி வித்தகபுரம் மக்களுடனான சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் இப்பகுதியில் மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதியின்றி அல்லல் படுகின்றனர். இதனை நான் நேரில் சென்று அவதானித்தேன். குடி தண்ணீர், மலசலகூட வசதிகளின்றியும் உரிய குடிமனைகள் இன்றியும் மக்கள் அநாதரவான நிலையில் நிற்கின்றனர். இளம் யுவதிகள் பலர் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இதுகுறித்து இராணுவ கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்கவுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளேன் என்று தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# புலமைப்பரிசில் கருத்தரங்கும் புத்தகக் கண்காட்சியும்

காயத்திரி பப்பிளிகேஷன் அனுசரணையில் புலமைப்பரிசில் கருத்தரங்கும் புத்தகக் கண்காட்சியும் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 1.30 மணிவரை கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெறும்

கல்வி அமைச்சின் முன்னாள் உதவிப் பணிப்பாளரான கலாபூஷணம் எம்.எஸ் ஸ்ரீ தயாளன் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறும். பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

முதலாம் நாள் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கொட்டாஞ்சேனை விவேகானந்தா இந்துக்கல்லூரி அதிபரான ஐ. இராஜரட்ணம் கலந்துகொள்வார். முதலாம் நாள் கருத்தரங்கை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் ஆசிரியரும் புலமைப்பரிசில் வித்தகர் விருது பெற்றவருமான கே.சுதர்சன் நடாத்துவர். - (ஸ்ரீ-2)

# இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு இந்தியா கடனுதவி

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் உட்கட்டுமான அபிவிருத்திகளுக்காக இந்திய அரசாங்கம் நீண்டகால கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ஆனந்தசர்மா இதனை தெரிவித்துள்ளார்.

தொடருந்து சக்திவள மற்றும் உட்கட்டுமானம் உள்ளிட்ட பாரிய வேலைத்திட்டங்களுக்கு இந்த நிதி திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும் எனவும் இலங்கை, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்காக இந்த வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இந்தியாவுக்கு அதிக சந்தை வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வவுனியா நகரசபையால் 10 ஆயிரம் கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் சேகரிப்பு

பிளாஸ்டிக்கை அகற்றுவோம். சூழலை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகமும் வவுனியா தெற்கு கல்வி வலயமும் இணைந்து வவுனியா நகர சபையுடன் செயற்படுத்தி வந்த பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பாவனைக்குதவாத பிளாஸ்டிக் பொருட்களை சேர்க்கும் நிகழ்ச்சியினூடாக வவுனியா நகரசபை யானது, பத்தாயிரம் கிலோவுக்கும் அதிகமான பிளாஸ்டிக் பொருட்களைச் சேர்த்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேசத்தில் அதிகளவான பிளாஸ்டிக் பொருட்கள் அநாதரவாக வீசப்படுவதையும் அதன்காரணமாக சூழல்மாசடைவதையும் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலமாக எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவுவதற்கான வழிவகைகளை குறைக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் சூழல் குழுக்களை உருவாக்கி மாணவர்கள் சேகரித்து வரும் பிளாஸ்டிக் பொருட்களை அளவையிட்டு அதனுடைய அளவைக்கு ஏற்ப பரிசில்களையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் வழங்கி வந்தது.

இதன்படி 3 கிலோவுக்கு மேல் சேகரிக்கும் மாணவர்கள் மாணவர் பதிவேடுகளையும் பிளாஸ்டிக் சேகரிக்கும் பைகளை பெறுவதுடன் ஆரம்பமாகும் போட்டியின் பரிசில்கள் 35 ஆவது கிலோவினை மாணவன் ஒருவன் சேர்க்கும் போது ரீசேட் மற்றும் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் அதிகபடியான பிளாஸ்டிக்கை சேர்க்கும் 3 மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்பட்டின் மூலமாக நகரசபைக்கு இதுவரை பத்தாயிரத்துக்கும் மேலதிகமான பிளாஸ்டிக் பொருட்கள் சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை நகர சபையானது, சுத்திகரிப்பு செய்து மீள் சுழற்சிக்கு உட்படுத்தவுள்ளதுடன் பாடசாலைகள் மூலம் கிடைக்கப் பெற்ற பிளாஸ்டிக் அளவுக்கேற்ப கிலோ ஒன்றிற்கு 10 ரூபா வீதம் பாடசாலைகளுக்கு வழங்கவுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆபாச வீடியோ படங்களை விநியோகித்து வந்த 4 கடை உரிமையாளர்கள் கைது

ஆபாச வீடியோ படங்களை பரிமாற்றம் செய்து வந்த நான்கு கடை உரிமையாளர்களை வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இச் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்திய கணனிகள், இறுவட்டுகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களான இவர்கள் இணையத்தளத்திலிருந்து ஆபாச வீடியோ படங்களை தரவிறக்கம் செய்து தொலைபேசிகளுக்கு பதிவேற்றம் செய்து விநியோகித்துள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி நிலையம் ஒன்றும் ஓட்டமாவடி பிரதான வீதியில் உள்ள மூன்று கையடக்கத் தொலைபேசி நிலையங்களும் முற்றுகையிடப்பட்டது.

இம்முற்றுகையில் கடை உரிமையாளர்கள் நால்வரும் இச்சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திய நான்கு கணனி இயந்திரங்களும் சில ஆபாச இறுவட்டுகளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து இவர்கள் நீண்ட நாட்களாக இச் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் கணனி இயந்திரங்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு பாடத் தெரிவுகளும் முக்கியமானவை

இன்று மாணவர்களின் உயர்கல்வியை அவர்களின் க.பொ.த (உ/த) இல் அவர்கள் தெரிவு செய்யும் பாடத்துறைகளே பெரிதும் தீர்மானிக்கின்றன. மாணவர்கள் தரம் ஆறில் இருந்தே அதாவது பதினொரு வயதிலேயே பாடத்தெரிவை தீர்மானிக்கிறார்கள். முதலில் அழகியற் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் என தமது பாடத் தெரிவை ஆரம்பிக்கி றார்கள். இத்தெரிவு பெரும்பாலும் பெற்றோர்களாலேயே தெரிவு செய்யப்படுகின்றது. இதனை குடும்ப சூழல், சகோதரர்களின் தெரிவு, நண்பர்களின் தெரிவு போன்ற காரணங்கள் தீர்மானிக்கின்றன. ஆனால், உண்மையில் இப்பாடங்களே உயர்தரப்பாட நெறியில் கலைத்துறையில் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. எனவே, இப்பாடத் தெரிவுகள் பிள்ளையின் கலைத்திறனுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படல் வேண்டும்.

இரண்டாவது பாடத் தெரிவுகள் தரம் 10 இல் அதாவது 15 வயதில் தொகுதிப் பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்பாடத் தெரிவுகளும் க.பொ.த (உ/த) பாடத் தெரிவுக்கு முக்கிய இடத்தை பிடிக்கிறது. உதாரணமாக உயர் தரத்தில் வர்த்தகத்துறையைத் தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் தரம் 10 இலே வர்த்தகப் பாடத்தை தெரிவு செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

இவற்றிற்கு மேலாக மாணவர்கள் க.பொ.த (உ/த) இல் தமது பாடத்துறையைத் தெரிவு செய்வதே மிக முக்கியமானதாக அமைகின்றது. மாணவர்கள் தூரநோக்குச் சிந்தனையுடன் பாடத்தெரிவை மேற்கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்காகவோ அல்லது நண்பர்களுக்காகவோ அல்லது கௌரவத்திற்காகவோ பாடத்தெரிவை மேற்கொள்ளலாகாது. தன்னை சுயமாக மதிப்பீடு செய்து தனக்கு எத்துறை பொருத்தம் என்பதையும் அத்துறையில் தனது முழுத் திறனையும் பயன்படுத்தி உச்ச வெளியீட்டைக் காண்பிக்க வேண்டும்.

இன்று க.பொ.த (உ/த) இல் மூன்று பாடங்களிலும் சித்திபெறாவிடின் உயர் கல்வியோ அல்லது வேலைவாய்போ கிடைக்கப் போவதில்லை. சில நிறுவனங்கள் க.பொ.த (சா/த) உடன் பட்டம் பெறலாம் என்று பல வழிகளைக் காட்டினாலும் அவை இலகுவான விடயமல்ல.

எனவே, நாம் எமது உயர்கல்விக்காகத் தெரிவு செய்யும் க.பொ.த (உ/த) பாடங்களை மனம்போன போக்கில் தெரிவு செய்யாது, எமது இயலுமை, இயலாமையை அறிந்து தெரிவு செய்ய வேண்டும். எல்லாத் துறைகளையும் கற்கும் ஆற்றல் கொண்ட மாணவன் பல்கலைக் கழகத்திற்கு நுழைவதற்கு வாய்ப்பான துறைகளையும் சிந்திக்க வேண்டும்.

குறிப்பிட்ட துறையைத்தான் தெரிவு செய்ய முடியும் என்று உள்ள மாணவர்கள் அத்துறையில் எப்பாடங்களைத் தெரிவு செய்வதன் மூலம் இலகுவாகப் பல்கலைக்கழகம் செல்ல முடியும் என்பதை அறிந்து தெரிவு செய்ய வேண்டும்.

மேலேயுள்ள அட்டவணை-1 ஆனது, கடந்த நான்கு வருடங்களில் பல்கலைக் கழகங்களில் பாட நெறியைக் கற்க தகுதியுடையோர்களின் எண்ணிக்கையையும் பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கையையும் அவர்களின் சதவீதத்தையும் காட்டுகின்றன.

### அட்டவணை -1

### பல்கலைக்கழக அனுமதி விபரம்

| க.பொ.த(உ/த) ஆண்டு | 2005 | | | 2006 | | | 2007 | | | 2008 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதி ஆண்டு | 2005/2006 | | | 2006/2007 | | | 2007/2008 | | | 2008/2009 | | |
| பாடப் பிரிவு | ப.த | ப.அ | சதவீதம் | ப.த | ப.அ | சதவீதம் | ப.த | ப.அ | சதவீதம் | ப.த | ப.அ | சதவீதம் |
| கலை | 53576 | 5166 | 9.64 | 53582 | 5849 | 10.92 | 56917 | 6307 | 11.08 | 65235 | 6693 | 10.26 |
| வணிகவியல் | 37128 | 3069 | 8.27 | 39758 | 3252 | 8.18 | 37861 | 4357 | 11.51 | 36707 | 4337 | 11.82 |
| உயிரியல் விஞ்ஞானம் | 16653 | 4525 | 27.17 | 15718 | 4384 | 27.89 | 16625 | 5164 | 31.06 | 17886 | 5323 | 29.76 |
| பௌதிக விஞ்ஞானம் | 11413 | 3838 | 33.63 | 10897 | 3711 | 34.06 | 10018 | 4241 | 42.33 | 10408 | 4493 | 43.17 |
| மொத்தம் | 118770 | 16598 | 13.97 | 119955 | 17196 | 14.34 | 121421 | 20069 | 16.53 | 130236 | 20846 | 16.01 |

ப.த:- பல்கலைக்கழகத்திற்கு தகுதியானோர்
ப.அ:- பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டோர்.

அட்டவணை ஒன்றின்படி பௌதிக விஞ்ஞானத் துறையானது, 33-43 சதவீதம் வரை பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதற்குக் கார ணம் இத்துறையில் பல பாடநெறி கள் உள்ளன.

மேலும் உயிரியல் துறைக்கு 27-31 சதவீதம் வரை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்வதற்கான வாய்ப்புள்ளது. கலைத்துறையும் வர்த்தகத் துறையும் ஏறத்தாழ 8-11 சதவீதத்திற்கும் இடையில் பல்கலைக்கழகம் தெரிவு செய்வதற்கான வாய்ப்புள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகளாக சகல மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி (S) அத்துடன் பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள் இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகங்களுக்கான அனுமதிக்கான மூலப்பிரமாணங்கள் இரண்டு மூலப்பிரமாண அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. கலைத்துறைக் கற்கைநெறிகளுக்கு நாடளாவியதிறமை அடிப்படையிலும் ஏனைய துறைகளுக்கு Z புள்ளி நிரலின் வரிசை ஒழுங்கில் நாடளாவிய திறமை அடிப்படையில் 40% உம் மாவட்ட சனத்தொகைக்கேற்ப விகிதாசார அடிப்படையில் 55% உம் பின்தங்கிய மாவட்டங்கள் என்ற வகையில் 5% உம் ஒதுக்கப்படுகிறது. 2010/2011 கல்வியாண்டுவரை யாழ்ப்பாணமும் பின்தங்கிய மாவட்டமாக கருதப் படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் திறமை அடிப்படையிலான தெரிவையும் ஏனைய முறையிலான தெரிவையும் அட்டவணை -2 காட்டுகிறது.

க.பொ.த (சா/த) இன் பெறுபேற்றின் அடிப்படையில் க.பொ.த (உ/த) இல் கல்வியைத் தொடர்ந்தாலும் பல்கலைக்கழக அனுமதியின் போது க.பொ.த (சா/த) இன் பாடங்களான ஆங்கிலம், கணிதம் , விஞ்ஞானம் போன்றவற்றின் பெறுபேறுகள் சில துறைகளுக்கு விசேடமாகக் கவனிக்கப்படுகின்றன. அவை அட்டவணை-3 இல் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை -3

| | கற்கைநெறி | க.பொ.த(சா/த) ஆங்கிலம் | க.பொ.த(சா/த) கணிதம் | க.பொ.த(சா/த) விஞ்ஞானம் |
|---|---|---|---|---|
| 1 | கணிய அளவையியல் | C | C | S |
| 2 | கலை-(கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம்) | S | -- | -- |
| 3 | கட்டடக் கலை | S | C | -- |
| 4 | வடிவமைப்பு( கட்டடக் கலை ) | S | C | -- |
| 5 | சட்டம் | C | -- | -- |
| 6 | தொடர்பாடல் கற்கைகள் | C | -- | -- |
| 7 | பட்டின மற்றும் நாட்டுத் திட்டமிடல் | C | C | -- |
| 8 | நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | C | C | C |
| 9 | தாதியியல் | S | -- | -- |
| 10 | தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | C | C | -- |
| 11 | மருந்தகவியல் | S | -- | -- |
| 12 | மருத்துவ ஆய்வுக் கூடவிஞ்ஞானங்கள் | S | -- | -- |
| 13 | ஊடு கதிர்ப்படமெடுப்பு | S | -- | -- |
| 14 | இயன் மருத்துவம் | S | -- | -- |
| 15 | வசதிகள் முகாமைத்துவம் | C | C | S |
| 16 | கணக்கிடலும் முகாமைத்துவமும் | -- | C | -- |
| 17 | கணக்கிடலும் தகவல் முறைமைகளும் | C | -- | -- |
| 18 | தகவல் தொழிநுட்பமும் முகாமைத்துவமும் | C | C | -- |

**சி.சிவராம் B.Sc(Dip in Ed)**
(ஆசிரியர் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி)

எனவே, மேற்கூறிய துறைகளில் கல்வி கற்பவர்கள் க.பொ.த (சா/த) இல் மேற்கூறிய பெறுபேறு இல்லை எனின் மாணவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும் முன்னர் இருமுறை க.பொ.த.(சா/த) பரீட்சை எடுக்கும் சந்தர்ப்பம் உண்டு. அதற்குள் அவர்கள் இப்பெறுபேறுகளை பெற்றுவிட வேண்டும். முன்னைய காலங்களில் துறைக்கான பல்கலைக்கழக தகுதி இருந்தும் க.பொ.த (சா/த) இன் பாடத்தில் தகுதியில்லாது துறையை இழந்த மாணவர்களும் உண்டு.


### அட்டவணை -2

### க.பொ.த(சா/த) பெறுபேறுகள்

| | க.பொ.த (உ/த) ஆண்டு | | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|
| | பல்கலைக்கழக அனுமதி ஆண்டு கற்கை நெறி | | 2006/2007 | 2007/2008 | 2008/2009 |
| 1 | கலை | தி | 279 | 244 | 312 |
| | | ஏ | 58 | 86 | 80 |
| 2 | சட்டம் | தி | 3 | 1 | 2 |
| | | ஏ | 7 | 7 | 7 |
| 3 | முகாமைத்துவம் | தி | 11 | 10 | 17 |
| | | ஏ | 61 | 72 | 75 |
| 4 | வர்த்தகம் | தி | 1 | -- | 3 |
| | | ஏ | 18 | 12 | 18 |
| 5 | மருத்துவம் | தி | 21 | 20 | 7 |
| | | ஏ | 29 | 29 | 29 |
| 6 | பல்அறுவை சிகிச்சை | தி | -- | -- | -- |
| | | ஏ | 2 | 2 | 2 |
| 7 | விலங்கு மருத்துவ விஞ்ஞானம் | தி | -- | 1 | -- |
| | | ஏ | 3 | 3 | 3 |
| தி | விவசாய விஞ்ஞானம் | தி | 45 | 56 | 41 |
| | | ஏ | 26 | 29 | 28 |
| 9 | உயிரியல் விஞ்ஞானம் | தி | 2 | 2 | 2 |
| | | ஏ | 36 | 37 | 40 |
| 10 | உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | தி | 13 | 10 | 7 |
| | | ஏ | 5 | 5 | 7 |
| 11 | மீன்பிடித்தலும் கடல் சார் விஞ்ஞானமும் | தி | -- | -- | 3 |
| | | ஏ | 1 | 1 | 1 |
| 12 | ஆயுள்வேத மருத்துவம் | தி | 45 | 44 | 42 |
| | | ஏ | -- | -- | -- |
| 13 | Paramedical Studies (துணை மருத்துவ கற்கை நெறிகள் | தி | 3 | 3 | 3 |
| | | ஏ | 6 | 9 | 6 |
| 14 | இயந்திரவியல் | தி | 29 | 38 | 30 |
| | | ஏ | 34 | 34 | 34 |
| 15 | கட்டடக் கலை /கணிய அளவையியல் | தி | 9 | 7 | 17 |
| | | ஏ | 5 | 5 | 4 |
| 16 | நவநாகரிக வடிவமைப்பு/போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒருங்கமைப்பு முகாமைத்துவமும் | தி | -- | -- | -- |
| | | ஏ | 1 | 1 | 1 |
| 17 | அளவையியல் விஞ்ஞானம் | தி | 5 | 9 | 6 |
| | | ஏ | 3 | 3 | 3 |
| 18 | கணனி SE/ MIT/IT/ ICT | தி | 1 | 30 | 14 |
| | | ஏ | 11 | 44 | 29 |
| 19 | பௌதீக விஞ்ஞானம் | தி | 39 | 50 | 39 |
| | | ஏ | 57 | 58 | 58 |
| 20 | மொத்தம் | தி | 506 | 525 | 545 |
| | | ஏ | 363 | 437 | 425 |
| 21 | யாழ். மாவட்ட மொத்தம் | | | | |
| | | | 869 | 962 | 970 |

தி:- நாடளாவிய திறமை
ஏ:- ஏனையவை (விகிதாசாரம், பின்தங்கிய)

# போர்க்களத்தில் பிரபாகரனை அழிக்கவில்லை



தேர்தல் பரபரப்பில் முக்கியக் கட்சிகள் எல்லாம் முழுவீச்சில் தமிழகமெங்கும் சுழன்று கொண்டு இருக்க, முக்கடலும் சங்கமிக்கும் குமரிக் கடற்கரையில் ம.தி.மு.க. தொண்டர்களும் தமிழ் ஆர்வலர்களும் கடந்த மார்ச் 31ஆம் திகதி கனத்த இதயத்துடன் குழுமி நின்றார்கள்.

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தி கரைப்பு நடக்க இருந்தது. 'மாலையில் தான் ஊர்வலம் நடக்கும்' என அறிவித்து இருந்தாலும், காலை நேரத்திலேயே கட்டுக் கடங்காத கூட்டம். பிரபாகரன், வைகோ படங்களைக்கொண்ட அட்டைகளும் ம.தி.மு.க கொடிகளும் அதிகம் தென்பட்டன. ஏனோ பொலிஸ் தலைகள் குறைவாகவே இருந்தன.

தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் வந்து சேர்ந்தனர். அஸ்தி கலசத்தை ஏந்தியபடி ஊர்வலத்துக்குச் செல்லத் தயாரானார் வைகோ. ஆயிரக்கணக்கில் காத்து நின்ற தமிழ் ஆர்வலர்களும் அமைதியாக ஊர்வலத்துக்குத் தயார் ஆனார்கள். அப்போது அங்கு வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர், "நீங்கள் அண்ணா சிலையில் இருந்து ஊர்வலம் செல்வதற்குத்தான் அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதனால் ஹோட்டலில் இருந்து ஊர்வலமாக செல்ல அனுமதிக்க முடியாது!" என்று தடுத்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த கூட்டத்தினர் ஆளாளுக்கு பொலிஸாருடன் வாக்குவாதத்தில் இறங்க, உடனே அனைவரையும் அமைதிப்படுத்திய வைகோ, "நான் தங்கியிருக்கும் ஹோட்டலில் இருந்து காரில்தான் வெளியே வர வேண்டுமா? ரோட்டில் நடக்கவும் அனுமதி இல்லையா?" என்று சூடாகக் கேட்டபடி விறுவிறுவென நடந்தார். அவருடன் பழ.நெடுமாறன், காசி ஆனந்தன் ஆகியோரும் இணைந்து கொண்டனர். அமைதியாக சென்று கொண்டு இருந்த ஊர்வலத்தில் திடீரென ஒருவர், "தலைவர் பிரபாகரன் வாழ்க!" எனக் கோஷம் எழுப்பியதும் சூடு பற்றியது. "வீரவணக்கம்... வீரவணக்கம்... பார்வதி அம்மாளுக்கு வீரவணக்கம்!" என்ற கோஷமும் விண்ணை முட்டத் தொடங்கியது. உடனே சுதாரித்துக் கொண்ட பொலிஸார், கூடுதல் பொலிஸாரை அனுப்பும்படி அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர். சற்று நேரத்தில் ஆயுதப் படை பொலிஸார் வந்து சேர்ந்தனர்.

கடற்கரை எங்கும் தமிழ் ஆர்வலர்கள் திரண்டு நின்றதால், சுற்றுலா வந்தவர்கள் திணறித்தான் போனார்கள். ஆனாலும், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள், நடப்பதை ஆர்வமாக விசாரித்துக்கொண்டு இருந்தனர். அஸ்தியைக் கரைத்த பின்னர் திரண்டு நின்ற கூட்டத்தினரிடம் பேசிய வைகோ, "இந்தக் கடற்கரையின் அலை ஓசை, இதே கடலின் மறுபக்கமான வல்வெட்டித்துறையில் எதிரொலிக்கும். உலகம் இதுவரை கண்டிராத ஆயுதப் போராட்டத்தை நடத்தித் தமிழனின் புகழை இமயம் அளவுக்கு எட்டச் செய்தவர் பிரபாகரன். அவரது தாயார் பார்வதி அம்மாள் அஸ்தியை கடந்த 22ஆம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் கரைத்தோம். இப்போது கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் கரைத்து இருக்கிறோம்.

இந்த வீரத்தாயை இலங்கை இராணுவம் இறுதிக் காலத்தில் கூட நிம்மதியாக வாழவிடாமல் அலைக்கழித்தது. அந்தத் துயரத்திலேயே அவரும் இறந்துபோனார். அவரை எரித்த சிதையில் இராணுவம் மூன்று நாய்களைக் கொன்றுதூக்கிப் போட்டது. இதைவிட, தமிழனுக்கு என்ன அவமானம் வேண்டும்? விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்டு இருக்கும் ஒரு செய்தியில்,

'பிரபாகரனை போர்க்களத்தில் அழித்ததற்கான எந்த ஓர் ஆதாரமும் இல்லை!' என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறது. இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற தமிழகத்தில் எந்த அரசியல் கட்சியையும் சாராத இளைஞர்கள், மாணவர்கள் அணி திரள வேண்டும். இலட்சக்கணக்கான இளைஞர்கள் தமிழ் ஈழத்தைக் காப்பாற்ற கடல் கடந்து செல்லும் காலம் விரைவில் வரும்!" என்றார் ஆக்ரோஷமாக.

## விக்கிலீக்ஸை ஆதாரம் காட்டும் வைகோ

பழ.நெடுமாறன் பேசும் போது, "பிரபாகரனின் தாய்க்கு இலங்கை அரசு செய்த கொடுமைகள் சொல்லிமாளாது. அவர் சிகிச்சை பெறுவதற்குக்கூட இந்திய அரசு அனுமதி மறுத்துவிட்டது. இதனை மக்கள் ஒரு போதும் மறக்கவோ... மன்னிக்கவோ மாட்டார்கள்" என்றார் வேதனையுடன்.

உணர்ச்சிப் பிழம்பாகப் புறப்பட்ட இளைஞர்கள், கண்ணீருடன் கலைந்து சென்றனர்!

**நன்றி - ஜீனியர் விகடன்**

# பாதுகாப்பு செலவீனங்களை குறைத்து வறிய மக்களுக்கு சேவையாற்ற நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

பாதுகாப்புச் செலவுகளை குறைத்து வறிய மக்களுக்கு சேவையாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் மற்றும் முரண்பாடுகளுக்காக செலவிடப்படும் பணத்தை அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக செலவிட்டு வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெற்காசிய நாடுகளின் அரச தலைவர்களிடம் ஜனாதிபதி கோரியுள் ளார்.

தெற்காசிய சுகாதாரம் தொடர்பான மாநாட்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்.

யுத்தத்தை முடிவுறுத்துவதற்கு மட்டுமன்றி சமூக நலன் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அரசாங்கத்தின் மனிதாபிமான நடவடிக்கைகள் உதவுவதாகவும் யுத்தத்தின் கசப்பான அனுபவங்களை அரசாங்கம் நினைவில் நிறுத்திக் கொண்டு செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதமாகக் காணப்பட்ட பாதுகாப்புச்செலவுகள் 2010 ஆம் ஆண்டில் 3 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியினால் மட்டும் நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்காது எனவும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை தொடர்பிலான மேற்குலக நாடுகளின் நிலைப்பாடு தவறானது

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

இலங்கை தொடர்பான மேற்குலக நாடுகளின் நிலைப்பாடு தவறானது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் யுத்தத்தின் பின்னரான இலங்கை நிலைமை குறித்த தமது நிலைப்பாடு பிழையானது என ஒப்புக் கொண்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போலிப் பிரசாரங்களை முறியடிப்பதற்கும் அதிகளவு முதலீடுகளை மேற்குலக நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிராக இதுவரையில் குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படவில்லை எனவும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களை விசாரணை செய்யுமாறு அமெரிக்கா அச்சுறுத்தல் விடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தக் குற்றச் செயல்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நாட்டில் பணவீக்கம் மேலும் உயர்வடையக் கூடும்


## ஹர்ஷ டி சில்வா எம்.பி.தெரிவிப்பு

நாட்டில் பண வீக்கம் மேலும் உயர்வடையக்கூடுமென ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.


ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தின் கீழான நியோ லிபரல் பொருளாதாரக் கொள்கைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் திரவத் தன்மையுடைய பணம் அதிகளவில் புழக்கத்தில் விடப்பட்டால் அதன் மூலம் நாட்டில் பண வீக்கம் உயர்வடையும் என அவர் தெரிவித்துள்ளார். அரச சொத்துக்களை விற்பனை செய்வ தன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தை அரசாங்கம் திருப்திப்படுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலிமுகத்திடல் உள்ளிட்ட முக்கியமான காணிகளை அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதாகக் குறிப்பிட்ட அவர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொண்டதன் பின்னர் நாட்டில் பண வீக்கம் உயர்வடைந்துள்ளதுடன் பொருட்கள் சேவைகளுக்கான விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



யூனியன் அஷ்யூரன்சின் யாழ்ப்பாணக் கிளையினால் மரண இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிகழ்வில், பிராந்திய முகாமையாளர் என்.சுகுணன் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதையும் ஏனைய உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.





தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந் நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேலைத்திட்டம் தொடர்பாக ஆளுநருக்கு எடுத்துரைப்பதையும் கலந்துரையாடல் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# ஈழத்தமிழருக்கு விருது வழங்கப்பட்டமை குறித்து நியூஸிலாந்திடம் இலங்கை கவலை

(கொழும்பு)

நியூஸிலாந்தில் வசிக்கும் ஆறுமுகன் தேவராஜாவுக்கு பிரித்தானிய அரசியின் பதக்கம் வழங்கப்படுவதற்கு சிபாரிசு செய்தமை தொடர்பாக நியூஸிலாந்து அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

பிரதி வெளிவிவகார அமைச்சர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இதைத் தெரிவித்தார்.

சுதந்திர இறைமையுள்ள 16 நாடுகளுக்கு பிரிட்டனின் 2 ஆம் எலிசபெத் அரசியார் நாட்டின் தலைவராக விளங்குகிறார். பிரிட்டனில் நடைபெற்ற புதுவருட விருது வழங்கல் நிகழ்வில் 3 தமிழர்களுக்கும் அவர் விருது வழங்கினார். இவர்களில் ஈழத்தமிழர்கள் இருவரும் இந்தியத் தமிழர் ஒருவரும் அடங்குவர்.

நியூஸிலாந்தைச் சேர்ந்த ஈழத்தமிழரான 77 வயதான ஆறுமுகன் தேவராஜாவும் அவர்களில் ஒருவர். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவரான அவர் நீயூஸிலாந்திலுள்ள தமிழ் சமூகத்திற்கு ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

எனினும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அங்கத்தவரான ஆறுமுகன் தேவராஜாவுக்கு இவ்வாறு விருது வழங்கப்பட்டமை குறித்து அரசாங்கத்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க நாடாளுமன்றில் கவலை தெரிவித்து உரையாற்றினார்.

அவரின் கருத்துக்கு பதி லளித்து உரையாற்றிய பிரதி வெளிவிவகார அமைச்சர் டிலான் பெரேரா இவ்விடயம் குறித்து நியூஸிலாந்து அரசாங்கத்திடம் இலங்கை கவலை தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப் பிற்காகவே இவ் விருது வழங்கப்பட்டதாகவும் பிரிவினைவாத திட்டத்தில் சம்பந்தப்பட்டமைக்காக அல்ல எனவும் நியூஸிலாந்து அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த உத்தரவாதத்தில் நாம் திருப்தி அடை யவில்லை. நிலைமையை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பூரண ஆதரவளிக்கப்படும்

## —இந்தியா அறிவிப்பு —

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

குறிப்பாக கிராமிய பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட ஒட்டுமொத்த பொருளாதாரத்தினையும் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்கப்படும் என கிராமிய பொருளாதார அமைச்சர் விலாஸ்ராவ்தேஷ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவை சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா ஏற்கனவே ஆதரவளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அமுலில் உள்ள பஞ்சாயத்து முறைமை தொடர்பிலும் இந்த சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பஞ்சாயத்து முறைமை முக்கியமானது என இந்திய அமைச்சர் தேஷ்முக் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ஸ்ரீ மகா பக்த விஜயம் என்னும் விடயம் பற்றி நிலஅளவையாளர் ம.ஆ. தங்கமயில் ஆன்மீகச் சொற்பொழி வாற்ற வுள்ளார்.

(ஸ்ரீ-3-35)

# பொலிஸாருக்கு எதிராக தமிழ் இளைஞனால் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞனொருவர் பொலிஸாருக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அருணாசலம் மேகலாதன் எனும் தமிழ் இளைஞரே பிரஸ்தாப அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மாதம் மார்ச் 10ஆம் திகதி தனக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றினையடுத்து தான் கொட்டாஞ் சேனையிலுள்ள விடுதியொன்றுக்குச் சென்றிருந்த வேளையில் இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் எதுவித காரணமுமற்ற நிலையில் தான் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது தனது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்று தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது மனு பிரதம நீதியரசர் அசோகடி சில்வா உள்ளிட்ட நீதியரசர் குழாமின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 27ஆம்திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில், கோண்டாவில் வடக்கு கலைவாணி றோட் இல்லத்தில் வசித்து கூட்டு மரண சாசனமொன்றை விட்டு இறந்த கந்தையா சந்திரசேகரத்தினதும் பெண் பரமேஸ்வரியினதும் மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக

மரணித்தவர்கள்

வழ.இல தத்துவம் /10/10

செல்லையா மகேஸ்வரன்
கலைவாணி றோட்
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

மனுதார்

எதிராக

1. செல்லையா நவரட்ணம்
2. செல்லையா மகள் நாகேஸ்வரி

இருவரும் கலைவாணி றோட்
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

எதிர் மனுதார்கள்

இவ்வழக்கு மேற்குறித்த மனுதாரினால் மேற்குறித்த மரணமடைந்தவர்களின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் யாராவது ஆட்சேபனை இருப்பின் இந் நீதிமன்றத்தில் 2011 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 19 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 4 ஆம் திகதி

வரைந்தது
மனுதாரின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி

(4426)


# அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் நோக்கிலேயே கிழக்கில் தேடுதல்

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு


(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் இராணுவத் துடன் இணைந்து மேற் கொண்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குற்றம் சுமத் தியுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.


யுத்தம் நிறைவடைந்த பின்னர் முதல் தடவையாக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகளை இராணு வத்தினர் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக செயற்படுகின்றவர்கள் குறித்த விபரங்களைத் திரட்டவே இவ்வாறு மூன்று மாவட்டங்களிலும் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



இவ்வாறான தேடுதல்களை மேற்கொள்ள அவசரகாலச் சட்டம் தொடர்ச்சியாக தேவைப்படுவதாகவும் அதனடிப்படையிலேயே அரசாங்கம் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடித்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)





கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் செ.வடிவேல் மங்கல விளக்கேற்றுவதனையும் அருகில் சிறப்பு விருந்தினரான முன்னாள் அதிபர் ச.ஞானலிங்கம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோர் நிற்பதனையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய நிகழ்வினையும் அதிபர் திருமதி என்.முகுந்தன் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

# ஜப்பானிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு இலங்கைத் தூதுவர் விஜயம்

(கொழும்பு)

டோக்கியோவிற்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஜப்பானிலுள்ள இரண்டு தற்காலிக முகாம்களுக்கு விஜயம் செய்துள்ளார்.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஜப்பான் மக்களுக்கு அனுதாபங்களை வெளிப்படுத்தும் நோக்கிலேயே அவர் அங்கு சென்றுள்ளார். வசந்த கரன்னகொடவுடன் இலங்கை பிரஜைகள் சிலரும் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது முகாம்களில் தங்கியுள்ள சுமார் 800 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

புகுஷிமா டைச்சி அணு உலையில் ஏற்பட்ட வெடிப்பினால் தமது வீடுகளில் இருந்து வெளியேறியவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் எதிர்பார்ப்புடன் அங்கு தங்கியுள்ளனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு இலங்கையை ஆழிப்பேரலை தாக்கியபோது பல்வேறு வகையில் ஜப்பான் ஒத்துழைப்பு வழங்கியதாக கரன்னகொட குறிப்பிட்டார். எனவே, ஜப்பானுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் உதவிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக குறித்த நகரின் மேயர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழகத்திலிருந்து ஆஸிக்கு புகலிடம் தேடிச்செல்லும் இலங்கை அகதிகள்

ஒரு தசாப்த காலத்துக்கும் அதிகமாக ஆப்கான்; பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்தலில் ஈடுபட்டவர்கள் தற்போது தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை இலக்கு வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவுஸ்திரேலிய ஊடகமொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தாடலில் அண்மையில் இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாகத் தப்பி வந்த இலங்கைத் தமிழர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இலங்கை அகதி ஒருவர், தமக்கு இலங்கையில் சொத்துக்கள் எவையும் இல்லையெனவும் இந்தியாவில் வசிப்பதில் தமக்கு விருப்பம் இருப்பதாகவும் எனினும் இந்தியாவில் வசித்த போது தமக்கு போதிய வசதிகள் இருக்கவில்லை எனவும் ஏற்ற தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# லங்கா இ-நியூஸ் இணையத்தளத்தை சீல் வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி

லங்கா இ-நியூஸ் இணையத்தளத்தை சீல் வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவரின் தகவலின்படி, 1973ஆம் ஆண்டு ஊடக சட்டத்தின் 5ஆம் சரத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் லங்கா இ-நியூஸ் இணையத்தளம், சண்டே லங்கா மற்றும் மிட்வீக் லங்கா ஆகிய பத்திரிகைகளுக்கு எதிராகப் பொதுமக்களின் முறைப்பாடுகளைச் சேகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்றையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதன்கீழ் அரசாங்கம் தமது ஆதரவாளர்களைக் கொண்டு குறித்த ஊடகங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை மேற்கொள்ளச் செய்து, அதனூடாக. அவற்றை சீல் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த லங்கா இ-நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் பேர்னாட் ரூபசிங்க நேற்று கடுவெல நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

(ஸ்ரீ-2)

# தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மலரும் தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நகரங்களுக்குச் செல்லும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மக்களின் பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் சீருடை அணிந்த பொலிஸாருக்கு மேலதிகமாக சிவில் உடையணிந்த பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்துறைப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

சன நெரிசல் மிக்க பிரதேசங்களுக்குச் செல்லும் மக்கள் தமது பொருட்கள் மற்றும் பணம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# 2011.04 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *217* - ரோம் பேரரசின் மன்னன் கரகல்லா படுகொலை செய்யப்பட்டான்.

★ *1767* - தாய்லாந்தின் அயுத்தயா பேரரசு பர்மியரிடம் வீழ்ந்தது.

★ *1857* - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டமைக்காக தூக்கிலிடப்பட்டான்.

★ *1864* - அமெரிக்க உள்நாட்டுப் போர்: லூசியாணாவில் மான்ஸ்ஃபீல்ட் என்ற இடத்தில் கூட்டமைப்பு படைகள் கூட்டுப் படைகளை தோற்கடித்தன.

★ *1866* - ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இத்தாலியும் புரூசியாவும் அணி திரண்டன.

★ *1867* - முதலாவது உலக கண்காட்சி பாரிஸ் நகரில் ஆரம்பமானது.

★ *1899* - மார்த்தா பிளேஸ் என்பவர் மின் இருக்கையில் மரண தண்டனை பெற்ற முதற் பெண்.

★ *1919* - பஞ்சாபில் நுழையக் கூடாதென்ற தடையை மீறியதால் மகாத்மா காந்தி டில்லி செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

★ *1929* - டில்லி மத்திய அரசு கட்டடத்தில் பகத் சிங், மற்றும் பத்துகேஷ்வர் தத் ஆகியோர் துண்டுப் பிரசுரங்களையும் குண்டுகளையும் வீசி தாமாகவே சரணடைந்தனர்.

★ *1942* - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் பிலிப்பைன்ஸின் பட்டான் மாநிலத்தைக் கைப்பற்றினர்.

★ *1950* - இந்தியாவும் பாகிஸ்தானும் லியாக்கட்-நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

★ *1957* - எகிப்தில் சுயஸ் கால்வாய் மீளத் திறக்கப்பட்டது.

★ *1973* - சைப்பிரசில் 32 குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன.

★ *2000* - அரிசோனாவில் அமெரிக்கக் கடற்படை விமானம் ஒன்று வீழ்ந்ததில் 19 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

★ *2004* - சூடான் அரசுக்கும் இரண்டு தீவிரவாத அமைப்புகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.

## பிறப்புகள்

★ *1911* - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் *(இ.1997)*

★ *1938* - கோபி அனான், நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலர்.

## இறப்புகள்

★ *1761* - மங்கள் பாண்டே, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை வீரர் *(பி.1827)*

★ *1931* - எரிக் கார்ல்ஃபெட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் *(பி.1864)*

★ *1936* - ரொபேர்ட் பாரானி, மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் *(பி.1876)*

★ *1973* - பாப்லோ பிக்காசோ, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் *(பி.1881)*

★ *1984* - பியோத்தர் காப்பிட்சா, நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் *(பி.1894)*

★ *1992* - டானியேல் போவெட், மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் *(பி.1907)*

*1985*- போபால் அனர்த்தம்: போபாலில் நச்சு வாயுக் கசிவினால் 2 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்ட நிகழ்வுக்காக இந்தியா யூனியன் கார்பைட் நிறுவனத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்தது.

# ஆனந்தத்தின் வழி



### உள்ளே என்ன இருக்கிறது?

என்வாழ்க்கையில் செயல்கள் என்று பார்த்தால் மனிதர்கள் மூன்று பிறவிகளில் செய்வதைக் காட்டிலும் நான் அதிகம் செய்திருக்கின்றேன். எனது வாழ்க்கையில் நான் செய்த காரியங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. நான் ஈடுபட்ட செயல்களின் தன்மையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

இவை அனைத்தையும் செய்ய எனக்கு எங்கே நேரம் கிடைக்கிறது என மக்கள் எப்போதும் எண்ணுகிறார்கள். உங்களுக்குள் பிரச்சினை எதுவும் இல்லையென்பதால் உங்களால் எவ்வளவு செய்ய முடிகிறது. எந்த நேரமும் உங்களுக்குள் பிரச்சினை இருந்தால் அவைகளைத் தீர்த்து வைக்கவே உங்களுக்கு அதிக நேரமும் சக்தியும் தேவைப்படுகிறது.

அதை மீறிவெளியே உங்களால் என்ன செய்யமுடியும்? மிகவும் குறைவாகத்தான் செயற்படமுடியும். நடவடிக்கை வெளியில் தான்; உள்ளே அல்ல. உட்புறத்திற்கு எந்த நடவடிக்கையும் தேவையில்லை; அது முழுமையாக இருக்கிறது. அதனுடன் நீங்கள் தொடர்பு கொண்டாலே போதும்.

தற்போது உங்கள் உணர்வுகளை ஆக்கிரமித்திருப்பது வெளியே இருப்பவைதான். உங்கள் உட்புறத்தைப் பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியவில்லை. ஆனந்தத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாமல் இருப்பதற்கு அடிப் படைக் காரணமே, உள்ளே என்ன இருக் கிறது என்பது உங்களுக்குத் தெரியா ததுதான். உள்ளே என்னஇருக்கிறது என்பது தெரியாது என்கிற அர்த்தத் தில் நான் இதைச் சொல்லவில்லை. உட்புறத்தைப் பற்றிய அறியாமையில் நீங்கள் மூழ்கியிருக்கிறீர்கள் என்று நான் சொல்கிறேன்.

வெளிப்புறத்தைப் பற்றி மட்டும்தான் உங்களுக்குத் தெரியும். உங்களது எண்ணங்களும் உணர்ச்சிகளும் உட்புறம் என நீங்கள் இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவை உட்புறம் இல்லை. உங்களது ஸ்தூலமான இந்த சரீரம்கூட உட்புறம் இல்லை. இதை நீங்கள் வெளியே இருந்து உணவு மூலம் சேர்த்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்லும் இந்த ஸ்தூல சரீரம், பூமியிலிருந்து நீங்கள் சேகரித்த ஒரு துண்டாகும்.

ஒருநாள் இறப்பு நேரும்போது அது மீண்டும் இந்த பூமியின் ஓர் அங்கமாக மாறிவிடும். இதை சற்று எண்ணிப் பாருங்கள். இந்த கிரகத்தில் உங்களுக்கும் எனக்கும் முன்னால் வாழ்ந்த கோடானுகோடி மனிதர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் மண்ணோடு மேல் மண்ணாகிப் போனார்கள். அப்படித்தான் நீங்களும் போகப் போகிறீர்கள்.

எனவே, யாராவது உங்களை மிகவும் ஆழமாகப் புதைத்தாலன்றி, உங்களது உடலும் ஒருநாள் அப்படித்தான் ஆகப் போகிறது. ஆசிரமத்தில் நாங்கள் இதைச் செய்வோம். நாங்கள் உங்களை மிகவும் ஆழத்தில்தான் புதைப் போம். ஏனென்றால், நீங்கள் திரும்ப வருவதை நாங்கள் விரும்பவில்லை; திரும்பி எழுந்து வந்து எங்களைத் தொந் தரவு செய்வதை விரும்பவில்லை. இறந் தால், நீங்கள் உண்மையிலேயே இறக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

கடந்த காலத்தின் எண்ணற்ற மனிதர்கள் இந்த மண்ணின் மேல் பகுதியாக மாறியிருக்கிறார்கள். எனது உடல் என நீங்கள் சொல்வது நீங்கள் சேகரித்த உணவுக் குவியலாகும். எனது மனம் என நீங்கள் சொல்வது, நீங்கள் சேகரித்த பதிவுகளின் குவியலாகும். எனவே இவையனைத்தும் வெளியிலிருந்து வந்தவை. உள்ளே என்ன இருக்கிறது என உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு எந்த உட்புறத்தைப் பற்றியும் தெரியாது. உங்களுக்கு உட்புறம் என்பது இன்னும் நிகழவில்லை. ணவேதான், ஆனந்தம் உங்களுக்கு இன்னமும் நிகழவில்லை. ஏனென்றால், ஆனந்தம் என்பது உட்புறத்தின் இயல்பு. அது வெளியே கிடைப்பதில்லை.

எப்போதாவது நீங்கள் விரும்பிய குறிப்பிட்ட சூழ்நிலைகள் உங்களுக்கு நிகழும்போது, உட்புறம் அதனை சிறிது வெளிப்படுத்திக்கொள்ளும். அப்போது ஆனந்தக் காற்றின் வாசனையை நீங்கள் சிறிது நுகர்கிறீர்கள். ஆனால், உட்புற ஆனந்தம் என்பது ஒரு எல்லையற்ற உணர்வாகும். அது எப்போதாவது வ[illegible]ம் வாசனையல்ல. அது நித்தியமான[illegible]; அதை அறிந்தால், அதில் நீங்கள் மூழ்கிப் போவீர்கள்.

## ஆன்மீகம் 18

நீங்கள் அதற்குள் மூழ்கிவிட்டால், பின்னர் வெளிப்புறம் என்பது உங்களுக்கு ஒரு விளையாட்டு போல... எப்படி வேண்டுமானாலும் நீங்கள் விளையாடலாம். நீங்கள் விரும்பியபடி வாழ்க்கையுடன் விளையாடலாம். ஆனால் அது உங்கள் மீது ஒரு சிறு சிராய்ப்பைக்கூட ஏற்படுத்தாது. தற்போதோ, வாழ்க்கை உங்களை முழுவதுமாக காயப்படுத்திவிட்டிருக்கிறது. பெரும்பாலான மனிதர்கள், 20 வயது ஆவதற்கு முன்பே தங்களது வாழ்வில் இனி மீளவேமுடியாத அளவிற்கு மோசமாக காயப்பட்டு விடுகிறார்கள்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழத்து தமிழ்ப் பெண்களின் கூட்டுக் கவித்தொகைகள்

## சொல்லாத சேதிகள் முதல் ஒலிக்காத இளவேனில் வரை ஓர் ஆய்வு 01

**த.அஜந்தகுமார்,**
**முன்னாள் உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

01 முன்னுரை

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் இடம் மிகவும் முக்கியமானது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஆரம்பகாலம்தொட்டே பெண்கள் பங்களிப்பு பல்வேறு வடிவங்களில் இருந்து வந்தபோதிலும் 1980களுக்குப் பிறகு வந்து சேர்ந்த பெண்ணியச் சிந்தனைகள் இலக்கியப்போக்கில் புதிய மாற்றங்களையும் புதிய பாதைகளையும் உருவாக்கின. "பெண்ணின் பிரச்சினைகளை மட்டுமன்றி சமூகத்தை, கலை இலக்கியங்களை ஆண் நோக்கிலிருந்து இடம்பெயர்ந்து பெண்நோக்கில் வைத்துப் புரிந்து கொள்வதற்கான முயற்சிகளும் அதன் வழியான பெண் மொழிகளின் உருவாக்கம் பற்றிய பிரஜைகளும் இன்று பெண் எழுத்துக்களில் பேசப்படும் பொருளாக முனைப்புக் கொண்டுள்ளது. அந்தவகையில் பெண் எழுத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றம் பல்வேறு பரிமாணங்களில் மிளிர வேண்டியுள்ளது எனக்கொள்ளலாம்"

"பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளும் ஒரு சமூகத்தில் பெண் எழுத்தின் ஆளுமை என்பது அச் சமூகத்திற்கு எதிரான மறுப்பு நடவடிக்கையாகவும் சுத்திகரிப்புச் செயலாகவும் அமைகிறது. பெண் எழுத்துப் பல்வேறு பரிமாணங்களில் தோன்றிக் கொண்டிருந்தாலும் பெண் அனுபவத்தையும் ஆணாதிக்க எதிர்ப்பையும் சமகால வாழ்வையும் பெண் தன் மொழியில் வெளிப்படுத்தியதில் கவிதைகளின் இடமே தனித்துவமானது."

'கவிதை மொழி என்பது மனதுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதாலும் கலகம் செய்வதற்கு ஏற்ற வடிவம் என்பதாலும் மொழியைப் பற்றிய மொழியாக அமைந்துள்ளது என்பதாலும் அவர்களுக்குக் கிடைக்கும் எல்லையில்லாக் கற்பனை வளத்தைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் மிக்கது என்பதாலும் அமுக்கப்பட்ட எந்தப் பெண்ணும் தனக்கான மொழியை உருவாக்கிக்கொள்ள கவிதையே சிறந்த சாதனம்' (Corakaplan) ஈழத்தைப் பொறுத்த வரையில் பெண்கள் அடையாளப்படுத்துவனவாகவும் பங்காளியாகவும் பாதிப்புற்றவளாகவும் கலகக்காரியாகவும் போரில் குதித்தவளாகவும் கவிதையிலேயே அவள் குரல் அதிகம் ஒலிக்கிறது.

பெண்களின் கவிதை இதழ்களிலும் பத்திரிகையிலும் பிரசுரமாகி வந்தாலும் சில பெண்படைப்பாளிகளின் கவிதைகள் தனித்தொகுதிகளாக வெளிவந்திருந்தாலும் இந்த ஆய்வானது சொல்லாத சேதிகள் (1986) தொகுதிகள் முதல் ஒலிக்காத இளவேனில் (2009) வரை வெளிவந்த கூட்டுத் தொகுப்புக்களை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறது. இந்தக் கூட்டுக்கவிதைத் தொகைகள் பற்றிய அறிமுகம் அவற்றின் பேசுபொருள் கிட்டத்தட்ட 25 வருடங்களை எட்டும் இந்த முயற்சியின் தடங்களும் அவற்றின் முக்கியத்துவமும் அவை கட்டியெழுப்பும் பெண் அனுபவங்கள் எட்டியிருக்கும் பெண்மொழிக்கான பிரக்ஞைகள் அந்தந்தக் காலத்தை உக்கிரத்துடனும் உண்மையுடனும் பிரதிபலிக்கும் சொல் முறை இறுதியாக இம் முயற்சிகள் பற்றிய மதிப்பீடு என்பவை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏதோவொரு வகையில் ஈழத்தை மையமாகக் கொண்டு ஈழத்துப் பெண்களை மட்டுமே கொண்டமைந்த கவித் தொகைகள் மாத்திரமே ஆய்வின் பரப்புக்கருதியும் வசதி கருதியும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதுவரை வெளிவந்த தொகுதிகளாக,

1. சொல்லாத சேதிகள் (1986)
2. மறையாத மறுபாதி (ஐரோப்பா 1992)
3. உயிர்வெளி- பெண்களின் காதற் கவிதைகள்-கிழக்கிலங்கை (1999)
4. எழுதாத உன் கவிதை-ஈழப் பெண்களின் கவிதைகள் (2001)
5. இசை பிழியப்பட்ட வீணை- மலையகப் பெண்களின் கவிதைகள் (2007)
6. பெயல் மணக்கும் பொழுது- ஈழத்துப் பெண்களின் கவிதைகள் (2007)
7. ஒலிக்காத இளவேனில் (2009) (வட அமெரிக்கா)

ஆகிய கூட்டுக் கவித்தொகைகள் முக்கியமானவை.

இவை தவிர மை (2007), பறத்தல் அதன் சுதந்திரம் (2001) போன்ற கூட்டுக் கவிதைத் தொகைகள் வந்திருந்தபோதிலும் அவை தனியே ஈழத்துப் பெண்களின் கவிதைகளை மாத்திரம் கொண்டமையவில்லை.

**கூட்டுக்கவித்தொகைகளின் நோக்கும் இலக்கும் உள்ளடக்கமும்**

மேற்சுட்டிய கவித் தொகைகளின் தோற்றத்துக்கான காரணங்களைப் பார்ப்பது எமது ஆய்வுக்கு நன்மை பயக்கின்ற ஒரு விடயமாகும்.

*சொல்லாத சேதிகள்* முன்னுரையானது 'பெண்களிடையே பெண் என்ற இந்த நிலைப்பாடு தோன்றியுள்ள இக்காலவட்டத்தில் நாம் பெண்களுக்கான ஒரு கலை இலக்கிய நெறியை உருவாக்குவது முக்கிய தேவையாகும்' என்றும்,

*மறையாத மறுபாதி* முன்னுரையானது, ஈழத்தில் இதுவரை காலமும் இருந்த, இருக்கின்ற பெண்ணடிமைக் கலாசாரத்துக்கு பலமான அடியின் நாதமாக வந்த 'சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுதியின் பிற்பாடு அதன் இரண்டாவது அடி புகலிடத்தில் ஒலிப்பதை இங்கே காணலாம்.

*(தொடரும்)*

# சுகாதார பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் நோய்கள் ஏற்படுவதை தடுக்க முடியும்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சுகாதார பழக்க வழக்கங்களை எமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் பல நோய்த் தாக்கங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு பொதுச் சுகாதார பரிசோதக பயிலுநர் மாணவர்களால் தொற்று நோய்களையும் தொற்றாத நோய்களையும் அறிந்து அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பான "சுகாதார விழிப்புணர்வுக் கையேடு" நேற்று முன்தினம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து வெளியிடப்பட்டது.

விழிப்புணர்வு கையேட்டிற்கு அவர் வழங்கிய வாழ்த்துரையிலேயே இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதக பயிலுநர் மாணவர்களால் வெளியிடப்படும் சுகாதார கல்வி பிரசுரத்திற்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் சுக நலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் உலக சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

நோய்கள் வந்தபின் தவிர்ப்பதை விட வருமுன் காப்பது சிறந்தது என்ற உயரிய எண்ணக் கருவை அடிப்படையாக வைத்து இச் சுகாதார கல்விப் பிரசுரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் தொடர்ந்தும் உணவு மற்றும் நீரினால் பரவும் நோய்கள் அதிகமாகவே காணப்படுகிறது. சில எளிமையான சுகாதார பழக்கவழக்கங்களால் இவற்றை நாம் கட்டுப்படுத்தலாம்.

அத்தோடு எமது நாட்டில் இன்றைய கால கட்டத்தில் தொற்று நோய்களின் ஆதிக்கம் குறைந்து தொற்றா நோய்களின் பரம்பல் அதிகரித்து வருகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கை, உணவு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் கணிசமான அளவு குறைக்கலாம்.

இது பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் மக்கள் மத்தியில் ஆரோக்கியமான சுகாதாரப் பழக்க வழங்கங்களை ஏற்படுத்தும் நோக்குடன் வெளியிடப்படும் இப்பிரசுரம் மூலம் மக்கள் சிறந்த பயனை அடைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடப வாகனத்தில் சப்பறக் காட்சியும் மறுநாள் சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)

# ஈரான் கடற்பரப்பில் எண்ணெய் திருடிய குற்றச்சாட்டில் இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

ஈரானின் கடற்பரப்பில் எண்ணெய் திருடிய இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானின் கடற்பரப்பில் எண்ணெய்த் திருட்டை மேற்கொள்ளும் வெளிநாட்டுக் கப்பல்களில் பணியாற்றும் இலங்கையர்களே அவ்வாறு ஈரானில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வர்த்தக கப்பல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள் பலருடன் இலங்கையர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக வர்த்தக கப்பல் கூட்டுத்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் வளைகுடா கடற்பரப்பில் கப்பல்களில் பணிக்குச் செல்லும் போது இலங்கையர்கள் வெகு அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூட்டுத்தாபனம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சை எதிர்வரும் ஜுலை மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படவுள்ளது.

திட்டமிடல் சேவையின் தரம்III ஐச் சேர்ந்தவர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அல்லது பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

✦ ✦ ✦

சமூக சேவைகள் அமைச்சின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் சமூகப் பணியில் இளமாணிப் பட்டயக் கற்கை நெறியில் இரண்டாம் வருட அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பட்டயக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கை சமூகப்பணி கல்லூரி/ தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து சமூகப்பணியில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருப்பதோடு ஆங்கிலத்தில் நடத்தப்படும் இப்பாடநெறியைப் பின்பற்ற ஆங்கிலத்தில் உயர் தேர்ச்சியையும் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் மூன்று வருடங்களுக்கு முழு நேரமாக இப்பாட நெறியைப் பின்பற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

மேற்படி சமூகப் பணி டிப்ளோமாதாரிகள் விண்ணப்பப் படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பி எஸ் டபிள்யூ -2011' எனக் குறிப்பிடுவதோடு வலது பக்க மேல் மூலையில் "சமூகப் பணி இள மாணி இரண்டாம் வருடத்திற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் , இல. 488 ஏ, நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு இம்மாதம் 27 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 08.04.2011 ஆம் திகதி வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடமுடியும். (ஸ்ரீ-4)

# எதிர்க்கட்சித் தலைவர் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஐரோப்பிய சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளார். இச்சுற்றுப் பயணத்தின் போது சரத் பொன்சேகாவின் விவகாரம், தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து அரசாங்கத்தின் அசமந்தப் போக்கு, யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பற்ற நிலை என்பன குறித்து ஐரோப்பிய தலைவர்களுக்கு அவர் விளக்கமளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்புடன் செயற்படும் உலக ஜனநாயக கவுன்சிலின் கூட்டத்தொடரிலும் அவர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் ஐரோப்பியப் பயணம் நிறைவுற்ற பின்னரே ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு ரவி கருணாநாயக்க உறுதியாக நியமிக்கப்படுவார் என்று சிறிகொத்தா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# இலங்கை கடற்பரப்பை சுற்றி கதிரியக்க சோதனைகள்


(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பை சுற்றி கதிரியக்க சோதனைகள் நடத்தப்படவுள்ளன. ஜப்பானின் ஆழிப் பேரலையின் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஜப்பான் ஆழிப்பேரலையின் பின்னர் அங்குள்ள புகுஷிமா அணு உலையில் கசிவு ஏற்பட்டது.

இந்த நிலையில் அந்தக் கசிவு இலங்கையின் சூழவுள்ள கடற்பரப்பில் கலந்துள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தச் சோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய 215 பேர் மீது கதிரியக்க சோதனைகள் நடத்தப்பட்டன.

அவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கதிரியக்க சக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபே விக்கிரம தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





உலக சுகாதார தினத்தை முன்னிட்டு சுகாதார பரிசோதகர் பயிலுநர் மாணவர்களால் நேற்று முன்தினம் யாழ். சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் வைத்து "சுகாதார விழிப்புணர்வுக் கையேடு" வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவராணி இக்கையேட்டை வெளியிட்டு வைப்பதையும் இக்கையேட்டுக்கான ஆய்வுரையினை மார்புநோய் வைத்தியர் வைத்திய கலாநிதி எஸ். யமுனானந்தா நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# லிபியா மீதான போர் நியாயமற்றது; உடனடியாக போரை நிறுத்துங்கள்

## ஒபாமாவுக்கு கடாபி கடிதம்



(டிரிபோலி)

லிபியா நாட்டில் ஜனாதிபதி கடாபி பதவி விலக கோரி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்க கடாபி இராணுவத்தை ஏவி விட்டுள்ளார். இராணுவம் பொது மக்கள் மீது கண் மூடித் தனமாக தாக்குதல் நடத்தியது. இதில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் லிபியா மீது தாக்குதல் நடத்தின. விமானங்கள் மூலம் குண்டு வீசின. ஆனாலும் கடாபி தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் கடாபி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். 3 பக்கங்கள் கொண்ட அந்த கடிதத்தில் கடாபி கூறியிருப்பதாவது, எங்கள் நாடு அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கும் சிறிய நாடு, இதன் மீது நீங்கள் போர் தொடுத்து இருப்பது நியாய மற்றது. எனவே எங்கள் மீதான போரை உடனே நிறுத்துங்கள். நீங்கள் ஒரு சிறந்த மனிதர். நீங்கள் இப்படி ஒரு தவறான செயலில் ஈடுபடக்கூடாது. உங்களுக்கு என்று முக்கிய பொறுப்புகள் உள்ளன. அதில் இருந்து மாறக்கூடாது. நீங்கள் உலக அமைதிக்கு பாடுபடுகிறீர்கள். எங்களுடனும் நட்பாக இருங்கள்.

தீவிரவாதிகளை ஒடுக்க ஒத்துழைப்பு கொடுங்கள். உங்கள் படைகள் தாக்குதல்களால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். ஜனநாயக சமுதாயத்தின் மீது விமான தாக்குதலையும் ஏவுகணை தாக்குதலையும் நடத்துவது சரியானது அல்ல. எங்களுக்கு எதிரான படையில் அல்கொய்தா தீவிரவாதிகள் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உங்களை எனது மகன் போல கருதுகிறேன். நீங்கள் அமெரிக்காவின் பெயரில் எங்கள் நாட்டு விடயத்தில் தலையிட்டு இருக்கிறீர்கள். லிபியா விடயத்தை லிபிய மக்களிடமே விட்டு விடுங்கள். ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோதும் எங்கள் மீது தாக்குதல் நடந்தது. இப்போது மீண்டும் தாக்குகிறீர்கள்.

நாங்கள் மன ரீதியாகவும் உடல் ரீதியாவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். இதை மேலும் தொடர்வது சரி அல்ல. நீங்கள் என்ன செய்தாலும் நான் உங்களை எனது மகனாகவே கருதுகிறேன். அடுத்து வரும் தேர்தலிலும் நீங்கள் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார். (ஶ்ரீ-2)

# இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் அமெரிக்கா தீவிரம்

இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்த அமெரிக்கா தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதுகுறித்து வோஷிங்டனில் தெற்கு, மத்திய ஆசிய நாடுகள் விவகாரங்களுக்கான அமெரிக்க அமைச்சர் ரொபார்ட் பிளேக் கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியில், இந்தியாவுடன், அமெரிக்கா எப்போதும் நட்புறவை வளர்க்கவே விரும்புகிறது. இதற்காகவே இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்த அமெரிக்க விரும்புகிறது. அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்காக இந்தியாவுடன் அமெரிக்கா தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

அணுசக்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இந்தியாவுக்கு அதிக அளவில் மின்சாரம் தேவைப்படுகிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவும் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும் அந்த நாட்டுக்கு மின்சாரம் அவசியமாகும். எனவே அணுமின் திட்டங்களை இந்தியா செயற்படுத்தும்.

எனவே அணுசக்தித் திட்டங்களை இந்தியாவுடன் இணைந்து செயற்படுத்த அமெரிக்கா முனைப்பு காட்டி வருகிறது. இதற்காக நட்பு நாடான இந்தியாவுடன் அமெரிக்கா இணைந்து செயற்பட்டு வருகிறது.

ஜப்பானில் அணு உலை வெடித்து ஏற்பட்டு வரும் கதிரியக்க பாதிப்பு விவகாரம் காரணமாக இந்தியாவும் அணுசக்தித் திட்டங்களை செயற்படுத்தாது என்று சொல்ல முடியாது. அப்படி ஒரு கருத்தை இந்தியா இதுவரை வெளியிடவில்லை என்றார் அவர்.

இதுகுறித்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கேரி ஆக்கர்மேன் கூறுகையில், போபாலில் விஷவாயு கசிந்து மிகப்பெரிய சோகச் சம்பவம் நடந்தது. அதைப் போலவே ஜப்பானிலும் நடந்துள்ள சம்பவம் பயங்கரமானதாக இருக்கிறது. அணுசக்தியை இந்தியாவுக்கு அளிக்க அமெரிக்கா இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து பிளேக் மேலும் கூறியதாவது, கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது இந்திய நாடாளுமன்றத்தில் பேசினார். அப்போது உலகில் முக்கியமான இடத்தை இந்தியா பிடித்து வருகிறது என்று ஒபாமா குறிப்பிட்டார். அந்த அளவுக்கு இந்தியா வளர்ச்சி பெற்று வருகிறது. (ஶ்ரீ-4)

# இயற்கை அனர்த்த பேரிழப்பைச் சீர்படுத்த கடுமையாக உழைக்கும் ஜப்பானியர்கள்

ஜப்பானுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதும் அந்த நாட்டின் வரலாற்று, கலாசாரப் பாரம்பரியத்தை உலகினருக்கு அறிமுகப்படுத்துவதுமான சுற்றுலாத்துறை மார்ச் 11-க்குப் பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வரவு குறைந்ததால் பொலிவிழந்து காணப்படுகிறது.

புகுஷிமா டாய்ச்சி அணுமின்சார நிலையத்தின் அணு உலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்து அணுக்கதிர் வீச்சு ஆபத்து ஏற்பட்டது.

இதனால் ஜப்பானின் வட கிழக்குப் பகுதி மட்டும் அல்லாமல் பிற பகுதிகளில் வசிப்பவர்களும் அச்சத்தில் உறைந்தனர்.

இந்தக் காரணத்தால் ஜப்பானுக்குப் செல்ல வேண்டாம் என்று மேலை நாடுகள் அனைத்தும் தத்தமது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தன. வெளிநாட்டுத் தூதரகங்களும் தங்கள் நாட்டு மக்கள் ஜப்பானைவிட்டுப் புறப்பட ஏற்பாடுகளைச் செய்து தந்தன.


இதனால் ஜப்பானில் வெளிநாட்டவர்கள் வருகை குறை ந்தது இருப்பும் குறைந்தது. ஜப்பானுக்குள்ளேயே உள்நாட்டு சுற்றுலாவும் அடியோடு நின்றுவிட்டது.

நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பைக் கண்டு ஜப்பானியர்கள் வருந்தி, விடுமுறை எடுக்காமல் உழைத்து நாட்டைச் சீர்படுத்தும் வேலைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். (ஶ்ரீ-4)




# கரட் உண்பதன் மூலம் மார்பக புற்றுநோயிலிருந்து விடுபடலாம்

## ஆய்வில் தகவல்



(லண்டன்)

கரட் சாப்பிட்டால் பெண்களின் மார்பகப் புற்று முற்றாமல் காத்துக்கொள்ளலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் ஃபுளோரிடாவில் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான அமெரிக்க அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கரட் மற்றும் சர்க்கரை வள்ளிக்கிழங்கை உண்பதன் மூலம் மார்பகப் புற்றுநோயிலிருந்து ஆரம்ப நிலையிலேயே விடுபடலாம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் காய்களில் உள்ள விற்றமின்ஏ இருந்து பெறப்படும் ரெட்டினாயிக் அமிலம், புற்றுநோய் உண்டாக்கும் செல்களை ஆரம்ப நிலையிலேயே அழித்துவிடும்.

கரட் சருமத்திற்கு பொலிவைத் தந்து சுருக்கத்தை நீக்குகிறது என்பதும் கண்டறியப்பட்டுள்ளதோடு இது பற்றி பிலடெல்பியாவிலுள்ள ஃபாக்ஸ்சேஸ் புற்றுநோய் மையத்தின் ஆராய்ச்சியாளர் சாண்ட்ரா ஃபெர்னா ண்டஸ் கூறுகையில், இந்தக் காய்களிலுள்ள சத்துக்கள் புற்று நோய் ஆரம்ப நிலையில் மட்டுமே அழிக்குமென்றும் நோய் முற்றிய புற்றுச் செல்களை அழிக்காது என்றும் தெரிவித்தார். (ஶ்ரீ-4)



லிபியாவில் போராட்டக்காரர்கள் கடாபியின் படைக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்கு தங்களது ரொக்கெட்லான்ச்செரை தயார் நிலையில் வைத்துள்ளதைப் படத்தில் காணலாம்.

# முபாரக்கின் சொத்துக்களை கையகப்படுத்த ஆளும் இராணுவத்தினர் முயற்சி

எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் அசையும், அசையா சொத்துக்களை கையகப்படுத்த ஆளும் இராணு வத்தால் நியமிக்கப்பட்ட சபை தீவிர நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது. எகிப்து ஜனாதிபதியாக 30 ஆண்டுகளுக்கு மேலாக பதவி வகித்த ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பதவி விலகக் கோரி மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

17 நாட்கள் நடந்த போராட்டத்தின் விளைவாக ஜனாதி பதி முபாரக்பதவி விலகினார். இதைத்தொடர்ந்து தற்காலிக இராணுவம் ஆட்சியினை நடத்தி வருகிறது. இந்நிலையில் ஜனாதிபதியின் சொத்துக்கள், வங்கி கணக்குகளை கையகப்படுத்த இராணுவம் தலைமை சபை ஒன்றினை நியமித்துள்ளது. இந்த சபை முபாரக் அவரது குடும்பத்தினர் குவித்துள்ள சொத்து விபரங்கள், வங்கி கணக்குகள் உள்ளிட்டவைகளை ஆராய்ந்து வருகின்றது.

இதற்கிடையே தற்காலிகப் பிரதமராக பொறுப்பு வகிக்கும் ஈஸாம் ஷெரீப் நாட்டின் ஊழலை ஒழித்து கட்டுவது தான் எனது முதல் வேலை என தெரிவித்தார். அந்த வகையில் முதல் நடவடிக்கையாக ஜனாதிபதி முபாரக்கின் சொத்துக்கள், வங்கி கணக்குகள் குறித்த விபரங்கள் விரைவில் சபை பிரதமரிடம் தாக்கல் செய்யும் என ஜிங்கூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஶ்ரீ-4)

# கருணாநிதி நினைத்திருந்தால்

# ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும்



## ஜெயலலிதா தெரிவிப்பு

(புதுடில்லி)
ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களின் உயிர்களை தமிழக முதல்வர் கருணாநிதியினால் காப்பாற்றியிருக்க முடியும் என அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவி செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவினை வாபஸ் பெற்றிருந்தால் பல இலங்கைத் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும்என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். காங்கிரஸுக்கு வழங்கி வந்த ஆதரவினை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அடிக்கடி போலி அச்சுறுத்தல் விடுத்து வந்தபோதிலும் ஆதரவினை வாபஸ் பெற்றுக் கொள்ளும் முனைப்புக்களை கருணாநிதி மேற்கொள்ளத் தவறியதாக அவர் குற்றஞ் சுமத்தியிருந்தார்.

கருணாநிதி அவரது குடும்பத்தின் நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு செயற்பட்டதாக ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வடிவேலுவின் கார் மீது செருப்பு வீச்சு

ஸ்ரீரங்கம் தொகுதி தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக நேற்று நடிகர் வடிவேலு பிரசாரம் மேற்கொண்டார். பிரசாரத்தின் போது தி.மு.க.வின் சாதனைகளைச் சொல்லி வாக்குச் சேகரித்த தோடு தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்தையும் தாக்கிப் பேசினார்.

பிரசாரம் முடிந்து வடிவேலு புறப்பட்ட போது அவரது கார் மீது செருப்புகள் வீசப்பட்டன.

அப்போது அங்கிருந்த பொலிஸார் செருப்பு வீசியவரை பிடித்தனர். அதில் பிடிப்பட்டவரின் பெயர் மாசிலாமணி என்றும் அவர் திருவானை கோவில் பகுதி தே.மு.தி.க துணைச் செயலாளர் என்றும் தெரிய வந்துள்ளது. அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இதனையறிந்த தி.மு.க. வினர் தே.மு.தி.க. அலுவலகத்தை சூறையாடினர். இதனால் அப்பகுதியில் பதற் றம் ஏற்பட்டுள்ளது. அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் இருக்க பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ)

# என் வாழ்க்கையே உங்களுக்கு பாடம்;

# மதுரையில் கருணாநிதி உருக்கம்

என் வாழ்க்கையில் நான் கற்ற பாடங்களை புத்தகமாக வெளியிடுவேன். அதை படித்து பொதுவாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை நீங்கள் பெற வேண்டும். அதைத் தான் தரமுடியும் என முதல்வர் கருணாநிதி உருக்கத்துடன் குறிப்பிட்டார்.

மதுரையில் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி உரையாற்றுகையில்,

எனக்கு 87 வயதாகிறது என்கின்றனர். இன்னும் எத்தனை ஆண்டுகள் வாழப் போகிறேன் என்பது எனக்கு தெரியாது. உங்களுக்கும் தெரியாது. ஆண்டவனுக்கு தெரியும் என சொல்ல மாட்டேன்.

சில ஆட்சிகள் மக்கள் செல்வாக்குடன் அமையும். ஆனால், அடையாளங்கள் எதுவுமில்லாமல் போய்விடும். தி.மு.க. ஆட்சியில் தான் மதுரையில் சாதனைகள் பல நடந்தன. நீண்டகால கோரிக்கையான உயர் நீதிமன்ற கிளைக்கு அடிக்கல் நாட்டப்பட்டதும் திறக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில் தான். எதிர்தரப்பினரை போல் பதிலுக்குப் பதில், தாக்குதலுக்கு தாக்குதல் என பேசும் பழக்கம் எனக்கு இல்லை. என்னை பற்றி யார் என்ன சொன்னாலும் இகழ்ந்தாலும் கவலைப்படப் போவதில்லை. என் வேலைகளை செய்து கொண்டே போகிறேன்.

நான் என்றும் உங்களுக்காக வாழ்பவன், எதையும் தியாகம் செய்பவன். 87 வயதில் என்ன தர முடியும். என் வாழ்க்கையில் நான் கற்ற பாடங்களை புத்தகமாக வெளியிடுவேன். அதைப் படித்து பொது வாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை நீங்கள் பெற வேண்டும். அதைத்தான் நான் தர முடியும். எந்த மக்கள் நம்மை இந் நிலைக்கு உயர்த்தினார்களோ, அவர்களுக்காக பாடுபடவேண்டும் என்ற உணர்வை உள்ளத்தில் கொண்டுள்ளதால், யாரும் நம்மை அழிக்க முடியாது.

தேர்தல் வந்து போகும் சம்பவம். அதில் நம்மை ஈடுபடுத்தி வெற்றி பெற்றால்தான் பெரும் போராட்டங்களில் வெற்றி பெற முடியும். கொடிய ஆட்சி வரா மல் காப்பாற்ற முடியும். நல்லாட்சி தொடர தங் களை தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கருணாநிதி தெரிவித்தார். (ஸ்ரீ-4)




# காங்கிரஸ் அரசுக்கு தமிழக மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்

## விஜயகாந்த் தெரிவிப்பு

மக்களை வஞ்சிக்கும் தன்மை கொண்ட புதுவை மாநில காங்கிரஸ் அரசுக்கும் அதன் கூட்டணிக்கட்சிகளுக்கும் இந்தத் தேர்தலில் பொதுமக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

புதுவை மாநிலம் காரைக்கால் தெற்குத் தொகுதி வேட்பாளர் கே.ஏ.யு. அசானாவை ஆதரித்து விஜயகாந்த் நேற்று முன்தினம் உரையாற்றுகையில்,

புதுவை மாநில காங்கிரஸ் அரசு மக்களை வஞ்சித்து வருகிறது. குறிப்பாக காரைக்காலில் மருத்துவமனை இருந்தும் இங்கு எந்தவிதமான மருத்துவ வசதிகளும் இல்லை.

இங்குள்ள பழைமையான நேரு சந்தை எந்தத் தருணத்திலும் இடிந்துவிழும் அபாய நிலையில் உள்ளது. புதுவையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் காங்கிரஸ் அரசு எடுக்கவில்லை. மீனவர்கள் நலனில் அக்கறையில்லாமல் செயற்பட்டது மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு.ஆகவே இந்தத் தேர்தல் மூலம் காங்கிரஸ் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு சரியான பாடம் புகட்டுங்கள்.

மக்களை ஏமாற்றும் குணம் காங்கிரஸுக்கு கைவந்த கலை. இதேபோன்றுதான் அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளும் செயற்படும். எனவே தே.மு.தி.க.வை நம்புங்கள். மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் ஒவ்வொன்றாக தீர்த்து வைக்க நாங்கள் பாடுபடுவோம். புதுவை முதல்வராக இருந்து என். ரங்கசாமிஆற்றிய பணிகளை இந்த மாநில மக்கள் மறக்கவில்லை என்பதை பிரசாரத்தின் போது அறிந்தேன். மீண்டும் அவர் முதல்வராகும் வாய்ப்பை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றார். (ஸ்ரீ-4)

# தமிழகத்தில் நடப்பது குடும்ப ஆட்சிதான்

## ஸ்டாலின் தெரிவிப்பு



தமிழக மக்களை தங்களது குடும்ப உறுப் பினராகக் கருதித்தான் பல்வேறு நலத் திட்டங் களை முதல்வர் கருணாநிதி நிறைவேற்றி வருகிறார். அதனால் தமிழகத்தில் நடப்பது குடும்ப ஆட்சிதான் என்று தமிழகத் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் வந் தால்தான் சில அரசியல் கட்சித் தலைவர்கள் வெளியே வருகின்றனர். மற்றக்காலங்களில் அவர்கள் ஓய்வெடுப்பதையே தங்களது முழு நேர வேலையாக்கி விட்டனர். எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடன் தே.மு.தி.க கூட்டணி வைத்து போட்டியிடுகிறது.


சினிமாவில் தான் விஜயகாந்த ஹீரோவாக நடித்து வருகிறார்.ஆனால் அரசியலைப் பொறுத்தவரையிலும் அவர் வில்லன்போல் செயற்படுகிறார்.

அரசியல் நாகரிகம் என்பது தே.மு.தி.க,அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளிடமும் இல்லை. தி.மு.க.வை பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளாக முதல்வர் கருணாநிதி செய்த நலத் திட்டங்களை மையப்படுத்தி வாக்குகளைக் கேட்கிறோம். அ.தி.மு.க.வும் தான் தமிழகத்தில் 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது. நலத்திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாகத் தான் தி.மு.க தலைவர் கருணாநிதி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் தனிநபர் விமர்சனங்களை ஜெயலலிதா வீசி வருகிறார்.

தி.மு.க தலைமையில் நடப்பது குடும்ப ஆட்சிதான்.முதல்வர் கருணாநிதி தமிழக மக்கள் அனைவரையும் தங்களது குடும்ப உறுப்பினராகக் கருத்தித்தான் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# கருணாநிதியின் குடும்பத்துக்கு சொத்து சேர்த்தது மட்டுமே தி.மு.க.வின் சாதனை

## சந்திரபாபு நாயுடு தெரிவிப்பு



தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தல் தி.மு.க ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரும் ஆந்திர மாநில முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

கோவை வ.உ.சி பூங்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அ.தி.மு.க தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

என்.டி.ஆருக்கும் எம்.ஜி.ஆருக்கும் நல்ல நட்புறவு இருந்தது. அதே நட்புறவு இப்போதும் அ.தி.மு.க, தெலுங்கு தேசம் இடையே நீடிக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை மின்வெட்டுக் காரணமாக தொழிற்றுறை உள்ளிட்ட அனைத்துத்துறைகளும் முடங்கிப் போய் இருக்கின்றன. தி.மு.க அரசு சாதனைகள் பல செய்துவிட்டதாக கருணாநிதி கூறுகிறார். ஆனால் இங்கு தினமும் 4மணி நேரம் மின்வெட்டு இருக்கிறது.

இது எந்தவகையில் சாதனை என்று தெரியவில்லை.முதல்வர் கருணாநிதியின் குடும்பத்தினர் சொத்துச் சேர்த்தது மட்டுமே தி.மு.க.வின் சாதனையாக உள்ளது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழலில் முன்னாள் அமைச்சர் ராசாவுக்கு மட்டுமே பங்கில்லை. நாடுமுழுவதும் எராளமான முக்கிய புள்ளிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் இழப்பு ஏற்படுத்திய தொகையை விவசாயிகளுக்கும் தொழில் முனைவோருக்கும் வழங்கியிருந்தால் தொழில் மற்றும் வேளாண்மையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்க முடியும் என்றார். (ஸ்ரீ-4)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் ஓட்டப்போட்டிக்கு தயாராக நிற்பதையும் வெற்றி பெற்ற அணிக்கான விருதை வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை வழங்குவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுடன் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

# எல்லை நிர்ணயத்தின் போது சகல கட்சிகளினதும் கருத்துக்கள் உள்வாங்கப்படல் வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



எல்லை நிர்ணயத்தை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் சகல கட்சிகளினதும் கருத்துக்கள் உள்வாங்கப்படல் அவசியமாகும்.

அத்துடன் இவ்விடயத்தில் கட்சிகள் தமது கருத்தினை தெரிவிப்பதற்கு அவகாசமும் வழங்கப்பட வேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது அறிமுகப்படுத்தப்படுகின்ற புதிய தேர்தல் முறைமைகளின் பிரகாரம் சிறு கட்சிகளால் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் பல குறைபாடுகள் நீக்கப்பட்டு வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது.

எமது கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்னும் ஏனைய சிறு கட்சிகளும் ஆரம்பத்திலிருந்து இதனை தெரிவித்து வந்திருக்கின்றன.

இதில் உள்ள சில சரத்துக்கள் அரசியல் யாப்புக்கு முரணானவையாக இருப்பதாக உயர் நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது. இருந்த போதிலும் அது தற்போது திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

எமது தரப்பில் இருந்து வெளிப்பட்ட ஆட்சேபனைகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது இவ்வாறிருக்க எல்லை நிர்ணயக் குழுவில் சிறுபான்மையினரின் பங்களிப்பு இருக்கவில்லை. அதிலும் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எந்தவொரு கட்சியினதும் கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அதேபோல் கட்சியின் வெற்றிடங்கள் ஏற்படும் பட்சத்தில் இடைக்கால தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் தேர்தல்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இன விகிதாசாரம் உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் அமுல்படுத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயத்தின் போது தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு சகல கட்சிகளுக்கும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

பழைய முறைமையின் அடிப்படையில் நோக்குமிடத்து விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் சிறு கட்சிகள் சுயேட்சைக் குழுக்களின் பிரதி நிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனாலும் புதிய முறையின்படி சிறிய கட்சிகளுக்கு உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற முடியாது என்றார். (ஸ்ரீ-2)

# வியலுவ தொகுதியின் புதிய அமைப்பாளராக அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன நியமனம்



(கொழும்பு)

பதுளை வியலுவ தொகுதிக்கு ஸ்ரீ லங்கா சு.கட்சி அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான லக்ஷ்மன் செனவிரத்னவுக்கான நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இதற்கான வைபவம் நடைபெற்றது. இதில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, வியலுவ முன்னாள் அமைப்பாளர் ஜே.என். குணதிலக்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் ஆரியரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# பக்கவாதநோயை தடுக்க 3 வாழைப்பழங்கள் போதும்

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

மூளைக்குச் செல்லும் இரத்தம் தடைப்படும்போது பக்கவாதம் ஏற்படுகின்றது. மூளைக்குச் செல்லும் இரத்தம் தடைப்படுவதற்கு இரத்தம் உறைதல் முக்கிய காரணமாக இருக்கிறது. தினமும் 3 வாழைப்பழங்களை சாப்பிட்டால் பக்கவாத நோயை தவிர்க்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

காலையில் ஒரு வாழைப்பழம். மதியம் ஒரு வாழைப்பழம், இரவு ஒரு வாழைப்பழம் சாப்பிடும் போது போதிய அளவு பொட்டாசியம் கிடைக்கிறது. இந்த பொட்டாசிய சத்துக்கள் மூலமாக மூளையில் ஏற்படும் இரத்த உறைவை தடுக்க முடியும்.

இது 21 சதவீத இரத்த உறைவை தடுக்க உதவுகிறது. இங்கிலாந்து மற்றும் இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் இதனை கண்டறிந்துள்ளனர். பொட்டாசியம் சார்ந்த கீரைகள், பருப்புகள், பால், மீன் ஆகியவற்றை போதியளவு எடுத்துக் கொள்ளும் போது பக்கவாத பிரச்சினைகளை தவிர்க்க முடியும்.

முந்திய ஆய்வுகளின் போது இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க வாழைப்பழம் உதவுகின்றது என தெரிவிக்கப்பட்டது. இந்த அறிக்கைகளில் வாழைப்பழம் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் பயன்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

தினமும் ஆயிரத்து600 மில்லிகிராம் பொட்டாசியத்தை நாம் எடுத்துக்கொள்ளும் போது பக்கவாத வாய்ப்புகள் 5 இல் ஒரு பங்கு குறைகிறது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஒரு வாழைப்பழத்தில் சராசரியாக 500 மில்லி கிராம் பொட்டாசியம் உள்ளது.

இந்த பொட்டாசிய அளவு இரத்த அழுத்த அளவைக் குறைப்பதற்கும் உடலில் உள்ள திரவ சமநிலைக்கும் உதவுகிறது. (ஸ்ரீ-2)

# சிறுவர்களின் நலன்கருதி விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

சிறுவர்களுக்காக கிடைக்கும் நன்கொடைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தும் சிறுவர் நிலையப் பொறுப்பாளர்கள் மற்றும் பாதுகாவலர்களை கண்டறிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த தகவலை தேசிய சிறுவர்பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவீத்துள்ளார்.

சில சிறுவர் நிலைய சிறுவர்களுக்கு ஏற்படும் பாதக விளைவுகள் குறித்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டினை அடுத்தே இந்த வேலை த்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் நலனுக்காக குறித்த சிறுவர் நிலையங்களுக்கு கிடைக்கும் நன்கொடைகள் மற்றும் வேறு கொடுப்பனவுகள் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முறைப்பாடுகள் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நாட்டில் இயங்கும் வங்கிகள் தொடர்பாக புதிய பரிந்துரைகளை மேற்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் இயங்கும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளின் ஆலோசனை மற்றும் ஆய்வு தொடர்பாக புதிய பரிந்துரைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 1988 இலக்கம் 30 இன் வங்கி சட்டப்படி நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மான அறிவிப்பு தொடர்பாக செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா இந்தத் தகவலை வெளியிட்டார். (ஸ்ரீ-2)

தானும் திருந்தமாட்டான். பிறரின் கட்டளைக்கும் கீழ்ப்படிய மாட்டான். அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன்.

– ஜேர்மன் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## 'பாவம்' என்று அமெரிக்கா நினைக்கிறது இலங்கையோ காலைக் காட்டுகிறது

ஈழத் தமிழர்களுக்கு பலமான அரசியற் தலைமை இருந்திருக்குமாயின் எங்கள் நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கும்.

என்ன செய்வது! நடுக் கடலிலும் நமக்கு நக்குத்தண்ணி என்பதாக எங்கள் விதி அமைந்து விட்டது.

இதற்காக வருந்தலாமே அன்றி எவரிலும் குறைகாண முடியாது. ஏனெனில் தமிழர்களின் அரசியற் தலைமை என்று தம்மைக் கூறிக் கொள்ளும் எவரிடமும் தமிழ் மக்களின் நலன் பற்றிய சிந்தனை முழுமையாக இல்லை.

இதற்கு மேலாக எங்கள் அரசியற் தலைமைகளின் வெளிநாட்டு உறவு என்பதும் மிகவும் மந்தமானதாகவே உள்ளது. இதன் காரணமாக எங்களின் எதிர்கால விடியலுக்கு எங்களால் எதுவும் செய்ய முடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை. அவ்வாறு எதுவும் ஆகாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் எங்கள் தலைமைகளால் எதுவும் பழுதாகிவிடக் கூடாது என்பதே தமிழ் மக்களின் தற்போதைய நிலைப்பாடு.

அவ்வகையில் இலங்கையின் அரசியற் தலைமை– அதன் போக்கு என்பன மேற்குலக வல்லாதிக்க நாடுகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துவதாக இருப்பதை உணரமுடிகின்றது. இதன் காரணமாக அமெரிக்கா, இலங்கையுடன் வெளிப்படையாக கருத்துமுரண்படுவதற்கு தயாராகி விட்டது.

இலங்கை ஒரு சிறிய– வறிய நாடு. குடியேற்றவாதத்திற்குள்ளும், பின்னாளில் யுத்தத்தின் பிடிக்குள்ளும் சிக்குண்ட இலங்கையின் பொருளாதார நிலைமை மிகவும் மந்தத்திற்குரியது.

தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் பணியைப் புறக்கணிப்புச் செய்தால் பெருந்தோட்ட ஏற்றுமதி ஸ்தம்பிதமாகிவிடும்.

அதேபோல் மத்திய கிழக்கு நாடுகள் இலங்கைப் பணிப் பெண்கள் எமக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டால், அன்னிய செலாவணி வீழ்ச்சி காணும்.

இவ்வாறு சேடமிழுக்கம் பொருளாதார நிலைமையைக் கொண்டுள்ள இலங்கைக்கு தங்கள் நாட்டில் கடலுக்குள் கொட்டுகின்ற கோதுமைத் தானியத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து அந்நாட்டு மக்களின் சீவனோபாயத்திற்கு உதவ வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகவிருந்தது.

ஆனால் இலங்கையின் சமகாலப் போக்கு அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

'பாவம்' என்று இலங்கையை நினைக்க அதோ, காலைத் தூக்கிக் காட்டுகிறது என்ற முடிபை அமெரிக்கா எடுத்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிபு இலங்கைக்கு எவ்வகையிலும் நல்லதல்ல.

அமெரிக்கா, இலங்கை மீது கொண்டுள்ள கோபத்தையும் அதனால் ஏற்படக் கூடிய ஆபத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு ஏதேனும் வழி இலங்கை அரசுக்கு உண்டெனில்,

அது இனப் பிரச்சினைக்கு தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வை வழங்குவதே ஆகும்.

# தீவிரவாதம் சார்ந்த பிரச்சினைகளை சார்க் அமைப்பு ஆராய்கிறது

(கொழும்பு)

தென்னாசியப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படுகின்ற போதைப்பொருட் கடத்தல் மற்றும் தீவிரவாதம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் சார்க் நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொலிஸ் அதிகாரிகளுக்காக கொழும்பில் நடைபெற்ற இரு நாள் கருத்தரங்கிலேயே இவ் விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் இணைந்து பணியாற்றுவதன் ஊடாக அமையக் கூடிய இலக்கு குறித்தும் ஒவ்வொரு நாடும் தமது வரையறைக்குள் மேற்கொள்ளக்கூடிய போதைப்பொருள் கடத்தல் தடுப்பு முறை தொடர்பிலும் இக் கருத்தரங்கில் ஆராயப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கின் போது சார்க் அமைப்பின், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சபை மற்றும் போதைப் பொருட் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான சபை ஆகியவற்றின் கூட்டங்களும் நடைபெற்றிருந்தன.

அத்துடன் இன்ரப்போல் அமைப்பு போன்று சார்க்போல் எனும் பெயரில் தென்னாசிய நாடுகளுக்கான பொலிஸ் அமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பிலும் இக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட போதிலும் இக் கருத்து பெரிய வரவேற்பைப் பெறவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் இத்தகைய அமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து இக் கருத்தரங்கில் ஆராயப்பட்டுள்ளது. (எ–1)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நன்மைகள் செய்த நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்வோம் (யோ :7:1–2,10,25–30)

புனித ஹிப்போ அகஸ்தினார் ஒரு முறை கூறினார்.(Saint Augustine of Hippo says)"வாழ்வை மரணத்திற்கு கையளிக்கவும் அதை மீட்டுப் பெற்றக்கொள்ளவும் அதிகாரத்தை இயேசு தன்னகத்தே வைத்திருந்தார். நாம் எவ்வளவு காலம் உயிர் வாழ்வோம்.என்று தெரிவுசெய்ய எம்மால் முடியாது. எமது விருப்பத்திற்கு மாறாகவும் மரணம் எமக்கு வரும்.இயேசு மரணித்ததன் மூலம் மரணத்தை ஏற்கனவே வெற்றி கொண்டுள்ளரர். அவரது மரணத்தால் மட்டும் தான் நாம் வாழ்வு பெற்றோம்.எங்களை மீட்பதற்கு நாம் இயேசுவிற்கு தேவையில்லை. மாறாக அவரின்றி நாம் ஒன்றும் செய்ய இயலாது.திராட்சை செடி கொடிகளுக்கு இரசத்தைக் கொடுப்பது போல் அவர் தம்மை எமக்கு தந்தார். அவரன்றி நாம் வாழவே முடியாது."

இயேசு உண்மையிலேயே கடவுள்தானா என்னும் கேள்வி இன்றும் எழாமல் இல்லை. கத்தோலிக்க விசுவாசத்தின் படி இயேசு கடவுளிடமிருந்து வந்த நாசரேயன் என்றும் தம்மைக் கடவுளுக்கு நிகரானவர் எனவும் காட்டினார். இதைப் புரிந்து கொள்ளாத பல யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை தயக்கம் காட்டினார்கள். நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை.

எங்களைத் துன்புறுத்த திட்டமிட்டு வாய்ப்பு தேடி காத்திருக்கும் கும்பல் இன்று எங்கும் உள்ளது. இயேசுவைப் பிடிக்க கோயில் திருவிழா எப்பொழுது கொண்டாடப்படும் என்று யூதர்களும் பரிசேயர்களும் காத்துக்கிடந்தது போல, எம்மையும் அவமானப்படுத்த, எமக்கு நட்டம் ஏற்படுத்த எம்மைத் தனிமைப் படுத்தி எமக்கு மன வேதனை கொடுக்க எம் எதிரிகள் காலங்காலமாக, ஆண்டாண்டாக காத்திருக்கலாம், முயற்சி செய்யலாம் ஆனால் இயேசுவிற்கு தந்தை செய்தது போல எம் நேரம் வரும் வரை யாரும் எம்மை தொட எம் தேவன் அனுமதிக்கமாட்டார். அதுவரை மகிழ்ந்து வாழ்வோம். இன்றைய உலகில் வாழ்கின்ற நாம் இயேசுவின் வரலாற்றை அறிந்து, அவருடைய சொற்களை ஏற்று, அவர் மீது நம்பிக்கை கொள்வோம் அவருக்கு சான்று பகர்ந்து வாழ்வோம். நன்மைகள் செய்து, நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்வோம்.எங்களை யாரும் தொட முடியாது. தலைமுடி ஒன்றையேனும் அசைக்க முடியாது.துணிவோடு செயற்படுவோம்.

**ம. பிரான்சிஸ்,**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனம்,மொழி,உடல்மூன்றும் ஒன்றிணைந்து செய்யும் செயற்பாடுதான் தூய்மையானது. இம் மூன்றையும் ஒன்றிணையச் செய்வதற்கு ஓர் ஆற்றல் தேவை. மனத்திலே எண்ணுவதை மொழியால் முழுமையாக வெளிப்படுத்த முடியாது. மனம் எண்ணுவதை உடலால் செய்வதற்கு தயக்கம் ஏற்படுவதுண்டு உடலின் தேவையை மொழியால் கூற முடியாத நிலையும் உண்டு எனவே இம் மூன்றையும் நெறிப்படுத்துவதற்கு இறை பணியே ஏற்றதென மணிவாசகர் கூறுகிறார்.

திருக்கோயிலில் செய்யும் தொண்டுப்பணி மனம்,மொழி,உடல் என்னும் மூன்றையும் ஒருங்கிணைத்துச் செயற்பட வைக்கும் என்கிறார்.தன்குறையைச் சுட்டியே இதனை தெளிவுபடுத்தியுள்ளார்.இறைவன் திருவடியைப் நினைத்து உருகுவது மனத்தின் செயற்பாடு இறைவனை புகழ்ந்துபாடுவது மொழியினால் செய்யப்படுவது. திருக்கோயிலை சுத்தம் செய்தல், மாலை கட்டுதல் என்பன உடலின் தொழிற்பாடு. இவற்றைச் செய்யாமல் அறிவின் ஆற்றல்கொண்டு இறைவனை அடைய முற்படுவது பயனற்றது எனப் பாடலிலே விளக்கியுள்ளார்.

இறைவன் கடவுளர் தலைவன் என மணிவாசகர் கூறுகிறார்.இத்தலைவனை அடைவதற்கு முதலில் அவனுடைய திருவடிகளைப் பற்ற வேண்டும்.திருவடி பற்றி இடையறாது மனத்திலே எண்ணவேண்டும். மனம் உருகும் வண்ணம் நினைக்கவேண்டும். எண்ணுதல் என்பது என்ன செய்ய வேண்டும் என்பதை வரிசைப்படுத்தல் நினைத்தல் என்பது பழைய அனுபவத்தை மீள நினைத்துப் பார்த்தல்.இவற்றை மனத்தால் செய்யலாம். இறைவன் பெருமைகள் பற்றிப் பிறரிடம் பேசும் போது இறைவன் பற்றிய ஈடுபாடு ஏற்படுகிறது.இறையனுபவம் பெற்றவர் சொற்கள் மற்றவரையும் இறைபணியில் ஈடுபடவைக்கும். இது ஒரு பக்தி நிலைப்பயிற்றலாகும்.

திருக்கோயிலில் செய்யப்படும் தொண்டுப்பணிகள் எமது உடல் நலம் பெறச்செய்யும்பணிகள்ஆகும்.பூமாலை புனைதல்,திருக்கோயிலை துப்புரவாக்கல்,மெழுகுதல் என்பன நாளார்ந்தம் செய்யப்பட வேண்டியவை. இவற்றை விட இறைவனைப்பற்றி பாடிய பாடல் என்னும் செயற்பாடு புற நினைப்புக்களை அறவே ஒழித்து இறை பற்றிய எண்ணத்தை மட்டும் நல்கும். மணிவாசகர் திருக்கோயிலை 'கோமானின் திருக்கோயில்' எனச் சிறப்பாகக் குறிப்பட்டுள்ளார். எல்லையில்லாத பேராற்றலுடைய இறைவன் உறையும் இடம் எல்லோருக்கும் சொந்தமானது. திருக்கோயில் பணியை இறை நாட்டம் உடைய எவரும் மேற்க்கொள்ளலாம். 'புத்தேளிர் கோமான்' ஆகிய இறைவன் கோயிற்பணி செய்வது தான் இறைவனைச் சேர்வதற்குரிய வழியாகும். இவ்வழியை விட்டுச் சாவதற்குரிய வழியைத்தான் நாடுவதாக மணிவாசகர் கூறுகிறார். 'சாமாறே விரைகின்றேன்' என்ற அவருடைய கூற்றுக் கவனத்திற்குரியது. அறிவினால் இறைவனை நாம் அடைய முடியாது. திருப்பணிகளால் இறைவனை அடையலாம் என வழிகாட்டுகிறார்.

"ஆமாறுன் திருவடிக்கே யகங்
குழையேன் அன்புருகேன்;
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந் துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே."

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

## திருமுறைப் பண்ணிசை வகுப்புகள்

ஸ்ரீ சிவகுருநாத வேதாந்த பீட வேதாந்த மடத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருமுறைப் பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வகுப்புகளை துறையிசை ஆதீனத் திருமுறைத் தோன்றல் கலாபூசணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் நடாத்தவுள்ளார்.

பண்ணிசைப் பரீட்சைப் பாட விதானத்திற்கு அமைவாக மாணவ, மாணவிகள் மற்றும் சைவ ஆலயங்களில் பஞ்சபுராணம், பன்னிரு திருமுறை ஓதுவதற்கான பயிற்சி பெறும் சகலருக்கும் குறித்த வகுப்புகள் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகுப்புகள் ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் குருபீடத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)

## தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு

இணுவில் அருள்மிகு ஸ்ரீ செகராச சேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 8 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா "விநாயகர் மகத்துவம்" பற்றி தொடர் இசைச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தி வருகிறார். (ஸ்ரீ-2)

## நாட்பாடசாலை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் 2010/2011 கல்வியாண்டில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களுக்கான நாட்பாடசாலை வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுமென பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# கிழக்கில் வெப்பம் அதிகரிப்பு பொதுமக்கள் கடும் அவதி

கிழக்கு மாகாணத்தில் தற்போது வெப்பம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றமையால் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றார்கள்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வெப்பம் அதிகரித்து வரும் அதேநேரம் இப்பிரதேசங்களில் அதிகாலை வேளைகளில் அதிக பனிமூட்டமும் காணப்படுகின்றது. குளிரான காலநிலையும் தென்படுகின்றது.

பனிமூட்டம் மூடிய நிலையில் இப்பிரதேசம் மலைநாட்டுப் பிரதேசங்கள் போன்று காட்சியளிக்கின்றது. குளிரான காலநிலை காலை 7.30 மணிவரையும் தொடர்கின்றது.

பின்னர் பகல் நேரமானதும் இப்பிரதேசங்களில் சூரிய ஒளி சுட்டெரிக்கின்றது. கடும் வெப்பம் ஏற்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் உட்பட மக்கள் பாதைகளில் நடமாட முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். பகல் நேரத்தில் நிலவும் அதிக உஷ்ணம் இரவு நேரங்களிலும் தொடர்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு குலுக்கல் திகதி மாற்றம்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தால் விற்பனை செய்யப்பட்டு வந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்கல் எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும்.

குறிப்பிட்ட ரிக்கெற் விற்பனை செய்யாத காரணத்தால் கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன செயலாளர் அறிவித்துள்ளார்.

அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்கல் கடந்த 4 ஆம் திகதி இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# டயலொக் நடாத்தும் மாபெரும் பரிசுப் போட்டி

முதலாவது பரிசாக புத்தம் புதிய எஸ்.யு.வி.-I டயலொக் லோட் ஒப் த றீலோட் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஹல்கரனோயா நுவரெலியாவைச் சேர்ந்த டபிள்யூ.எம்.நிமல் வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது மாதாந்த மாபெரும் சீட்டிழுப்பின் பரிசளிப்பு வைபவத்தின்போது நிமல் மற்றும் அவரது குடும்பத்தார் புத்தம் புதிய காரை ஓட்டிச் சென்ற அதேவேளை, அம்பகஹாவத்த, வெலிமடவைச் சேர்ந்த ஏ.டி.ஹேரத் புத்தம் புதிய மோட்டார் காரினை பெற்றுள்ளார்.

கடந்த மாதத்தில் இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா நிறுவனமானது தமது வாடிக்கையாளர்களுக்காக இலங்கை தொலைத்தொடர்புகள் துறை வரலாற்றிலேயே மாபெரும் விரிவாக்கல் செயற்றிட்டமான லோட் ஒப் த றீலோட்-I அறிமுகப்படுத்தியிருக்கின்றது..

இதனூடாக டயலொக் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பக்கேஜ் வாடிக்கையாளர்கள் தனித்துவமான உடனடி நாளாந்த சீட்டிழுப்பிற்கும் மற்றும் மாதாந்த சீட்டிழுப்பிற்கும் தெரிவு செய்யப்பட்டனர். நாளாந்த சீட்டிழுப்பின் பரிசுகளாக 3 எல்.சி.டி. தொலைக்காட்சிகள், டயலொக் மொபைல் புரோட்பாண்ட் வழங்கும் ஒரு நெட்புக், 5 நொக்கியா தொலைபேசிகள் மற்றும் 250 வோடா போன் தொலைபேசிகள் என்பன வழங்கப்படுகின்றன. மாதாந்த சீட்டிழுப்பில் முதல் இரண்டு மாபெரும் பரிசுகளுக்கு அப்பால், மொத்தமாக 20 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்படுகின்றன.

90 டயலொக் மொபைல் வாடிக்கையாளர்கள் 32 இன்ச் எல்.சி.டி. தொலைக்காட்சி பெட்டிகளையும் 30 வாடிக்கையாளர்கள் ஹோம் நெட்புக் உடனான டயலாக் மொபைல் புரோட்பாண்ட் இணைப்புகளையும் தட்டிச் சென்று முதலாவதாக நடாத்தப்பட்ட மாபெரும் மாதாந்தச் சீட்டிழுப்பின் மார்ச் மாத வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போது எந்தவொரு டயலொக் மொபைலுக்கும் 50 ரூபாயை விட றீலோட் செய்யும் ஒவ்வொரு முறையும் அதன் வாடிக்கையாளர்கள் வெற்றிவாய்' பைத் தட்டிச் செல்ல முடியும். இந்த வா' ப்பு டயலொக் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பக்கேஜ் வாடிக்கையாளர்கள் இருவருக்கும் பொருந்தும்.

டயலொக் முற்கொடுப்பனவு பக்கேஜ் வாடிக்கையாளர்கள் தமது டயலொக் மொபைலை 50 ரூபாவால் றீசார்ஜ் அல்லது றீலோட் செய்யும் ஒவ்வொரு தருணமும் உடனடி தினசரி சீட்டிழுப்பிலும் மற்றும் மாதாந்த மாபெரும் சீட்டிழுப்பிலும் பங்குபெறுவர். தினசரி சீட்டிழுப்பின் வெற்றியாளர்கள் விபரம், குறித்த வெற்றியாளர்களுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் உடனடியாக அறிவிக்கப்படும். மொபைலை ரொப்-அப் செய்யும் ஒவ்வொரு தடவையும் மாதாந்த மாபெரும் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாடிக்கையாளரினது வாய்ப்புகள் குறித்து அவரது மொபைலுக்கு எஸ்.எம்.எஸ்.மூலம் அறிவிக்கப்படும்.

அதேபோல், டயலொக் பிற்கொடுப்பனவு பக்கேஜ் வாடிக்கையாளர்கள் தமது கட்டணப் பட்டியலுக்காக செலவிடும் ஒவ்வொரு 50 ரூபாவிற்கும் மாதாந்த மாபெரும் சீட்டிழுப்பில் பங்குபெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவதுடன், தற்போதைய மாதாந்த கொடுப்பனவில் அல்லது பணம் செலுத்த வேண்டிய திகதிக்கு முன்னர் மேற்கொள்ளும் ஒவ்வொரு 100 ரூபாய் கொடுப்பனவுக்கும் ஒரு போனஸ் வாய்ப்பையும் பெற்றுக்கொள்வர்.

ஒவ்வொரு பில் கொடுப்பனவின் பின்னரும் வாடிக்கையாளரது மொபைலுக்கு அவருடைய சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புகள் குறித்து அறிவிக்கப்படும். மாதாந்த மாபெரும் சீட்டிழுப்பிற்கான வெற்றியாளர்கள், டயலொக் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு இணைப்பின் வாய்ப்புகளில் இருந்து எழுந்தமானமாகத் தெரிவுசெய்யப்படுவர்.

வாடிக்கையாளர்கள் #107# க்கு அழைப்பினை ஏற்படுத்தி இந்த சீட்டிழுப்பில் பங்குபற்றுவதற்கு தமக்கு மொத்தமாய் கிடைக்கப்பெற்றிருக்கும் வாய்ப்புகளை அறிந்துகொள்ளலாம். கடனட்டை மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் இதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

# யாழ்.உரும்பிராய் இந்து கல்லூரியின் நூற்றாண்டு விழா

## முதலாம் நாள் நிகழ்வுகள்




(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நாளையும் நாளை மறுதினமும் எதிர்வரும் 11ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில் முதலாம் அரங்கு 9 மணிக்கு கற்பக விநாயக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக லண்டன் தொழிலதிபரான க.தர்மகுலசிங்கம் மற்றும் அவரது பாரியார் திருமதி அனுலா தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வலி.கிழக்கு பிரதேச செயலர் க.பிரதீபன், யாழ்.கல்வி வலய கட்டட வேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன், இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவர் கா.கண்ணதாசன், நூற்றாண்டு விழாக் குழுவின் செயலாளர் ச.ஏகாம்பரநாதன், பொருளாளர் செ.நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஸ்தாபகர் நினைவுப் பேருரையை இலண்டன் வாழ் பழைய மாணவர் சங்க உறுப்பினர் எம்.ரி.செல்வராசா ஆற்றுவார்.

இரண்டாம் அரங்கு பிற்பகல் 4.30 மணிக்கு கற்பக விநாயகர் அரங்கில் அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, அவரது பாரியார் திருமதி இலக்ஷ்மி தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக நீர்ப்பாசனத் திணைக்கள ஓய்வு பெற்ற பொறியியலாளர் ஜெயராஜசிங்கம், அவரது பாரியார் திருமதி பத்மாதேவி ஜெயராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவி திருமதி துவாரகா தேவராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அராலி மத்தி உலோலைச்சிட்டி அருள்மிகு விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத்திரு விழாவும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)

☆☆☆

(மருதங்கேணி)

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-35)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# வண்ணமயமான கலை நிகழ்வுகளுடன் ஐ.பி.எல். திருவிழா இன்று ஆரம்பம்

## முதல் ஆட்டத்தில் சென்னை – கொல்கத்தா மோதல்

ஐ.பி.எல் நான்காவது இருபது – 20 கிரிக்கெட் திருவிழா சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், டில்லி டேர்டேவில்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ்லெவின் பஞ்சாப், ஐதராபாத் டெக்கான் சார்ஜஸ் ஆகிய 8 அணிகளுடன் இம்முறை புனே வாரியர்ஸ், கொச்சி டஸ்கேர்ஸ் ஆகிய 2 அணிகள் என மொத்தம் 10 அணிகள் சம்பியன் வெல்ல பலப்பரீட்சை நடத்துகின்றன.

கடந்த தொடர்களில் ஆடிய முன்னணி வீரர்கள் பலர் அணி மாறியுள்ளார்கள். காம்பீர், யூசுப்பதான் ஆகியோரை பல கோடிகளுக்கு கொல்கத்தா அணி வளைத்துப் போட்டுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி வென்றுள்ளதால் ஐ.பி.எல் தொடரில் வீரர்கள் மீதான எதிர்பார்ப்பு இரசிகர்களிடம் அதிகரித்துள்ளது. அவர்களும் சிக்ஸர் மழை பொழிந்து இரசிகர்களை மகிழ்விக்க தயாராகி வருகிறார்கள்.

சென்னையில் இன்று ஆரம்பமாகும் திருவிழா மே 28 ஆம் திகதி சென்னையில் முடிவடைகிறது. மொத்தம் 51 நாட்களில் 74 ஆட்டங்கள் நடக்கிறது.

இம்முறை புதிய விதிமுறைகள் அமுல்ப் படுத்தப்பட உள்ளது. அரையிறுதி ஆட்டத்திற்கு பதிலாக பிளே ஓவ் இறுதிச் சுற்று கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் ஆட்டத்தின் சுவாரஸ்யம் மேலும் அதிகரிக்கும்.

ஆரம்பவிழாவை எப்போதும் போல் இம்முறையும் கோலாகலமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாலிவூட் நடிகர்களான அமிர்தாபபச்சன் போட்டியை ஆரம்பித்து வைக்க உள்ளார். அதைத் தொடர்ந்து கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. ஷாருக்கான் ஐ.பி.எல் பாடலுக்கு நடனமாடுகின்றார்.

பிரபல பாடகர்கள் பங்கேற்கும் இசை நிகழ்ச்சியும் நடக்கிறது. தொடர்ந்து நடைபெறும் ஆரம்ப ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்த்து ஆடுகிறது. இப்போட்டி இரவு 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

## துளித் துளியாய்...

**இணையத்தள உரிமை ரூ.260 கோடி**

ஐ.பி.எல் போட்டிகள் தொடர்பான செய்திகளை இணையத்தளம், செல்போன், ரேடியோ ஆகியவற்றில் வெளியிடும் உரிமையை ரூ. 261.6 கோடி கொடுத்து டைம்ஸ் ஒப் இந்தியா நிறுவனம் வாங்கியுள்ளது. 2011 முதல் 2014 வரை இதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.


**கொலிங்வுட்டுக்கு பதில் ஓரம்**

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த கொலிங்வுட் காயம் காரணமாக விலகியுள்ளார். இதைத் தொடர்ந்து அவருக்கு பதிலாக ஜேக்கப் ஓரம் ரூ. 1.12 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று முன்தினம் அணியுடன் இணைந்தார்.

**இப்படித்தான் பங்கு போடுவாங்க...**

ஐ.பி.எல் போட்டிகள் மூலம் கோடிக்கணக்கில் இந்திய கிரிக்கெட் சபைக்கு வருமானம் வருகிறது. இந்த வருமானத்தில் 40 சதவிகிதம் ஐ.பி.எல் நிர்வாக அமைப்பிற்கு கொடுக்கப்படும். 54 சதவிகிதம் அணி உரிமையாளர்களுக்கும், 6 சதவிகிதம் பரிசுத் தொகைக்காகவும் ஒதுக்கப்படும். 2017 வரை இதே விகிதத்தில் வருமானம் பிரித்து வழங்கப்படும். அதற்கு பின்னர் ஐ.பி.எல்லுக்கு 50 சதவிகிதம், அணி உரிமையாளர்களுக்கு 45 சதவிகிதம், பரிசுத்தொகை 5 சதவிகிதம் வழங்கப்படும்.

## அதிரடி மிரட்டலுக்கு தயார்



ராசியில்லாத அணியாகக் கருதப்படும் மும்பை இந்தியன்ஸ் முதல் 2 தொடர்களிலும் ஜெயிக்க வேண்டிய ஆட்டத்தில் கூட தோல்வியைச் சந்தித்தது. ஆனால் கடந்த முறை சச்சின் அசத்தினார். இதனால் இறுதிப் போட்டி வரை அந்த அணி முன்னேறியது. சச்சின், ஹர்பஜன் சிங், போலார்ட், மலிங்க ஆகியோர் நீடிக்கின்றனர். சகீர்கான் இல்லாதது சற்று இழப்புத்தான்.

அணியை வலுப்படுத்துவதற்காக ரோகித்சர்மா, அன்ரூசைமண்ட்ஸ், முனாப்பட்டேல், ஜேம்ஸ் பிராங்ளின் ஆகியோர் வளைத்துப் போடப்பட்டுள்ளனர். அம்பாதிராயுட், சதீஸ் ஆகியோரின் அதிரடியுடன் மிரட்ட தயாராகி உள்ளது மும்பை இந்தியன்ஸ்.

**உரிமையாளர் :** ரிலையன்ஸ் 98.3%, ரீ ஸ்டார் ரீடேல் 1.7%

**அணி மதிப்பு :** ரூ. 503 கோடி


**அணித்தலைவர் :** டெண்டுல்கர்

**அதிக ஏலத்தொகை வீரர் :** ரோகித் சர்மா

**ஏலமதிப்பு :** ரூ. 9 கோடி

**வீரர்கள் விபரம் :** சச்சின் (அணித்தலைவர்), மலிங்க, டேவிட் ஜேக்கப்ஸ், ஹர்பஜன் சிங், ரோகித்சர்மா, ஜேம்ஸ் பிராங்ளின், போலார்ட், சைமண்ட்ஸ், முனாப்பட்டேல், மைக்கே, அம்பாதிராயுட், அபுநிகாம், ஹென்ட்ரிகியூஸ், சதீஸ்,மொர்டசா, பிலிஸ்சார்ட், துஷார்தேரே, சுமன்.

## உத்வேகத்துடன் டெக்கான் சார்ஜர்ஸ்



முதல் தொடரில் படுதோல்வியைச் சந்தித்த டெக்கான் சார்ஜர்ஸ் அணி 2 ஆவது தொடரில் சம்பியன் பட்டம் வென்றது. இம்முறை ஒட்டுமொத்த அணியும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அணித்தலைவராக சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார். மும்பை அணியில் ஆடிய ஷிகார்தவான், டுமினி ஆகியோர் இழுத்து போடப்பட்டுள்ளனர். டுமினியைத் தவிர அதிரடிக்கு கமரூன் வையிட் மட்டுமே உள்ளார். பந்து வீச்சில் ஸ்ரையன், கோனி, இஷாந்த் சர்மா வலுசேர்க்க கூடும்.

**உரிமையாளர் :** டெக்கான் குரோனிக்கல் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

**அணி மதிப்பு :** ரூ. 481 கோடி

**அணித் தலைவர் :** சங்கக்கார

**அதிக ஏலத்தொகை வீரர் :** டேல் ஸ்ரையன்

**ஏல மதிப்பு :** ரூ. 5 கோடி

**வீரர்கள் விபரம் :**

சங்கக்கார (அணித்தலைவர்), பீற்றர்சன், டுமினி, கமரூன் வையிட், இஷாந் சர்மா, டானியல் கிறிஸ்டியன், ஜூயன்தெரோன், ஓஜா, கோனி, ஷிகார்தவான், அமீத்மிஸ்ரா, கிறிஸ்லேன்.

## வலுவாக களமிறங்கும் பெங்களூர்



பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி இம்முறை விக்டோரி தலைமையில் களமிறங்குகிறது. கடந்த தொடரில் கடுமையான விமர்சனத்திற்கு ஆளான பெங்களூர் அணி 2 ஆவது தொடரில் இறுதிப்போட்டி வரை முன்னேறி அசத்தியது. கும்ளே இல்லாதது இம்முறை இழப்புத்தான்.

அணியை வலுப்படுத்துவதற்காக மும்பை அணியில் ஆடிய சவுரப்திவாரி, சகீர்கான், டில்லி அணியில் ஆடிய டில்சான், டிர்க்நான்ஸ் ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அதிரடி நாயகனாக டிவில்லியர்ஸ் உள்ளார்.

**உரிமையாளர் :** யூ.பி.குரூப் (விஜய் மல்லையா)

**அணி மதிப்பு :** ரூ. 500 கோடி

**அணித்தலைவர் :** விக்டோரி

**அதிக ஏலத்தொகை வீரர் :** விராத் ஹோலி

**ஏல மதிப்பு :** 8 கோடி

**வீரர்கள் விபரம் :** டானியல் விக்டோரி (அணித்தலைவர்), ஹோலி, டிவில்லியர்ஸ், நான்ஸ், போமர்ரோச், ரோஸ்சவ், ஜோனதன் வான்டைர், டில்ஷான், புஜாரா, அபிமன்யூமிதுன், பிரதீப், சகீர்கான், சவுரப் திவாரி, லாங்க்வெல்ட், வான்டர் வாத், முகமெட் கைப்.

## சேவாக் தலைமையில் மீண்டும் டில்லி




டில்லி அணி கடந்த தொடர்களில் சிறப்பான வெற்றிகளை பெற்ற போதிலும் அரையிறுதிகளில் மோசமாகச் செயல்ப்பட்டு கோட்டைவிட்டது. கடந்த முறை ஆடிய வீரர்களில் சேவாக் மட்டுமே நீடிக்கிறார். அணித்தலைவர் பதவியை துறந்த அவருக்கு மீண்டும் பதவி கொடுக்கப்பட்டுள்ளது.

அதிரடியில் டேவிட் வோர்னர்,ஜேம்ஸ் ஹோப்ஸ், நமன் ஓயா ஆகியோர் உள்ளனர். பந்து வீச்சில் இர்பான் பதான், மோர்னே மோர்க்கல், அசோக் டிண்டா ஆகியோர் தயாராகி வருகின்றனர்.

**உரிமையாளர்கள் :** ஜிஎம்ஆர் ஸ்போர்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் 51%, ஜி.எம்.ராவ் 13%, ஸ்ரீனிவாஸ் பொம்மி டாலா 12%, ஜி.பி.எஸ்.ராஜூ 12%, கிரன் குமார் 12%

**அணி மதிப்பு :** ரூ. 378 கோடி

**அணித்தலைவர் :** சேவாக்

**அதிக ஏலத்தொகை வீரர் :** இர்பான் பதான் **ஏல மதிப்பு :** ரூ. 8 கோடி

**வீரர்கள் விபரம் :** சேவாக் (அணித்தலைவர்), நமன் ஓஜா, ஆரோன் பிஞ்ச், அசோக் டிண்டா, மத்யூவேட், வேணுகோபால்ராவ், இங்க்ராம், இர்பான் பதான், கொப்ஸ், உமேஷ் யாதவ், மக்டொனால்ட், உன்முகுத்சந்த், வோர்னர்,மோர்னே மோர்க்கல், அஜித் அகார்கர்.வான்டர் மெர்வி, டிரேவிஸ் பிர்த்.




நான்காவது தெற்காசிய மாநாட்டில் கலந்து கொண்ட பிரமுகர்கள்...

NIRU KONDAVIL
O/L 2010 இல் 9 A சித்திகளைப்பெற்ற
☸ யோகராஜா லோஜீபன்
☸ விந்துயா வரதராஜசர்மா
ஆகியோருடன் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற அனைத்து மாணவச் செல்வங்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.
T.P. :0775086846 நிரு கல்விச் சமூகத்தினர்
(3898)

# மக்களின் பிரச்சினைகள் குறித்...

அவர் மேலும் கூறியதாவது,

நேற்று மூன்று நான்கு விடயங்கள் பேசப்பட்டது. அதில் ஒன்று காணாமல் போன அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய பொதுமக்கள் தொடர்பான விடயம்.

அந்த விடயத்தை பொறுத்தவரையில் வருகின்ற 16ஆம் திகதி சயித்வாஸ் குணவர்த்தன என்பவரைச் சந்தித்து அவரிடம் இருக்கக் கூடிய விபரங்களைப் பரிசீலித்து பொதுமக்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

850 பேருக்கு மேற்பட்ட அரசியற் கைதிகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் அனேகமாக ஒருசில மாதங்களுக்குள் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு வழக்குகள் இருந்தாலும் அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது.

மூன்றாவதாக திருமுருகண்டி, முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு போன்ற பகுதிகளில் மீள் குடியேற்றம் தொடர்பாகப் பேசப்பட்டதோடு அதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு முருகண்டிப் பகுதியில் கண்ணிவெடி முழுமையாக அகற்றப்பட்டதாகவும் அதில் மக்களை மீள்குடியேற்ற முடியும் எனவும் எம்மால் தெரிவிக்கப்பட்டது.

அடுத்ததாக மூதூரில் இருக்கக்கூடிய சம்பூர், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் போன்ற பகுதிகளில் மீள்குடியேற்றங்கள் தொடர்பாக தெளிவான விளக்கங்களை தாங்கள் எமக்குத் தருவதாகவும் கூறப்பட்டது.

மூதூர், யாழ்ப்பாணம் பற்றிய தெளிவான விளக்கங்கள் எம்மால் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்ட கூட்டத்தின்போதே அது தொடர்பாக விளக்கமளிக்கப்படும்.

இக் கூட்டத்தில் அரசியல் தொடர்பான தீர்வுகள் பற்றி கலந்துரையாடப்படவில்லை. முழுமையாக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது. இது அரசியல் கூட்டமல்ல.

பேசுவதற்கு வந்த குழுவிற்கு தலைவராக இருக்கக்கூடியவர் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாஆகியோர் இதில் நிமல் சிறிபால டி சில்வா, பீரிஸ் ஆகியோர் ஏற் கெனவே விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டவர்கள். இதனைவிட இதன் செயலாளராகவுள்ள சஜித்வாஸ் குணவர்த்தன என்பவர் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமானவர்.

இதனால் இங்கு நடக்கக்கூடிய விடயங்களை முழுமையாக ஜனாதிபதியிடம் கூறக் கூடியவர். ஆகவே சிறப்பான முறையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழு மூலமாக ஏதாவது வருமா? இல்லையா? என்பது வேறுவிடயம். இருப்பினும் சிறந்த அமைச்சர்களை இக் குழு உள்ளடக்கியுள்ளது என்று சுரேஷ் எம்.பி கூறினார். (ச-6)

# மகாவம்சத்தில்...

நான்காம் நூற்றாண்டு முதல் பிரித்தானியர்கள் 1815இல் இலங்கையை கைப்பற்றும் காலம் வரையிலான சரித்தை விபரிக்கிறது என்று இலங்கை கலாசார அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க கூறினார்.

அதனையடுத்து முன்னணி எழுத்தாளர்களால் அதனது 6-வது பாகத்தில் 1978 முதல் 2010 வரையிலான காலப்பகுதி குறித்து எழுதப்படவுள்ளதாகவும், அதில் மஹிந்த ராஜபக்ஷ அவர்களது காலப்பகுதிக்காக மூன்று அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை புனைவு கற்பனை ஐதீகம் வரலாறு இவற்றின் கலவைதான் மகாவம்சம் என்று விமர்சித்துள்ள கவிஞர் சேரன், இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் தனக்கு ஆச்சரியத்தை தரவில்லை என்று கூறுகிறார்.

புனைவுகள் நிறைந்த பழைய மகாவம்சத்துக்கும் தற்போது இலங்கை அரசாங்கம் இணைக்கும் அத்தியாயங்களுக்கும் இடையே ஒரு வித்தியாசம் மாத்திரமே இருப்பதாகவும் கூறுகிறார். அதாவது பழைய மகாவம்சம் சம்பவங்கள் நிகழ்ந்த பல நூற்றாண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டிருக்கிறது என்றும் இப்போது இவர்கள் போர் முடிந்த் உடனேயே அதனை எழுதுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த புதிய சேர்க்கையானது வரலாறு சார்ந்ததாக, ஆய்வு சார்ந்ததாக இருக்காது என்றும் இது அரசியல் சார்ந்ததாக சுயநலம் சார்ந்ததாக ஓர் நாட்டினுடைய அதிபரின் மிகை மதிப்பீடு சார்ந்ததாக தன்னைப் பற்றிய மகோன்னதம் சார்ந்த கற்பனை சார்ந்ததாக இருப்பதாகச் சேரன் கூறினார். (ச-5)

# ஐ.நா.சபையை எதிர்...

மீறல்கள், ஊடகங்கள் மீதான அடக்குமுறை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இத்தகைய நபர்களால் முடியாது. இத்தகைய குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் புகழை மீள நிலைநிறுத்துவதற்கு இத்தகைய நபர்களால் முடியாது.

இத்தகைய குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் புகழை மீளநிலைநிறுத்துவதற்கு பொருத்தமான நபர்களை நியமிக்குமாறு நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம் என அவர் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியினர் இலங்கையில் ஐ.நாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனினும் நாட்டிற்கு வெளியே வித்தியாசமாக செயற்படுகின்றனர். வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் அவர்கள் ஒரே மாதிரியாக செயற்படுவதற்கு அவர்களுக்கு துணிவு இருக்க வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இருப்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூலமே இலங்கையர்கள் அறிந்துகொண்டனர். 1989ஆம் ஆண்டு இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அப்போது நாடாளுமன்றின் உறுப்பினராக இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த ஆணைக் குழுவிடம் சென்றார் என லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி கூறினார். (ச-5)

# புனர்வாழ்வு பெற்ற...

வியாழக்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இத் திட்டம் இவ் வருடத்துக்குள் முடிபடையும் என பிரதமர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்தில் புனர்வாழ்வு நிலையத்திலிந்து 313 விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் சமூகத்தில் முறையான வகையில் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு படையினர் அவர்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். 70 வீதமானோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கையை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். இவ் வருட இறுதிக்குள் ஏனையோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கை பூர்த்தியாகும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-1)

# ஜப்பானில் மீண்டும்...

அதையடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு அது மீளப்பெறப்பட்து. இப்பூகம்பத்தினால் தலைநகர் டோக்கியோவிலுள்ள கட்டிடங்களும் அதிர்ந்தன.

கடந்த மாதம் 9.0 ரிச்டர் அளவிலான பூகம்பத்தினாலும் அதைத் தொடர்ந்த சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே நேற்றைய பூகம்பமும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பூகம்பத்தையடுத்து புகுஷிமா தாய்ச்சி அணு உலையிலிருந்து ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ச-5)

# பிளேக்கை சந்தித்து...

நேரம் ஒதுக்கத் தயாரில்லை என்று வலியுறுத்தியுள்ள அவர், அதற்கு பதிலாக வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸைச் சந்திக்குமாறு அறிவித்துள்ளார்.

ஆயினும் வெளிநாட்டமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தற்போதைய நாட்களில் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளதன் காரணமாகவே றொபேட் ஓ பிளேக்கின் இலங்கைக்கான விஜயம் தற்போதைக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதே முறையில் கடும் தொனியிலான மறுப்பை முன்னை நாள் பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் அலிஸ்டெயார் பேர்ட்டி மற்றும் இலங்கைக்கான பிரிட்டனின் முன்னை நாள் தூதுவர் கலாநிதி டேவிட் ஹைஸ் ஆகியோர் விடயத்திலும் முன்னைய சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# உதவி அரச அதிபர் பணி...

டங்களிலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் செயலகங்கள் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்படவுள்ளன.

இதேவேளை கைத்தொழில் மற்றும் வணிகவியல்துறை அமைச்சர் றிஷாத் பதியூதீனின் அமைச்சரவைப் பத்திரத்திற்கேற்ப இயற்கை உரத்தின் தரத்தை ஆராய்வதற்கும் அவற்றின் மூலமான உற்பத்திப் பொருட்களின் தரத்தைப் பாதுகாக்கவும் தனியான அதிகார சபை ஒன்றை அமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்துடன் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைவாக ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படவுள்ள பாடசாலை முகாமைத்துவத்திற்கு தேவையான மனித வளங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடம் வழங்கப்படவுள்ள சீருடைகளின் 50 வீதத்தை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்வதற்காக 2100 மில்-லியன் ரூபாயை ஒதுக்க அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது. (ச-5)

# மனித உரிமை மீறல்...

எவரும் குறிப்பாக மேற்கத்தேய நாடுகள் குரல் கொடுக்கவில்லை.

எமது நாட்டின் அனைத்து இன மக்களும் சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான செயற்பாட்டை மனித உரிமை மீறல் என குற்றச்சாட்டுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது செயற்பாடு மனித உரிமை மீறலா சுதந்திரமா என்பதை வருகின்ற தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களின் ஊடாக நன்கு கண்டுகொள்ளலாம்.

இலங்கையுடனான எதிர்கால ஒத்துழைப்பு குறித்து அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து தகவல் திணைக்களத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் வழங்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு இராஜதந்திர மட்டத்தில் செயற்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-2)

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு-2
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-2892)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2011 & Day Class
மாணவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்
கணக்கீடு A.P. பகீரதன் B.B.A.(FM Spl)
கிரயக் கணக்கீடு Sat, Sun -11.00 -12.00 PM
பங்குடமை முடிவுக் கணக்கீடு Sat, Sun -2.00 -3.30 PM
கம்பனிக் கணக்கீடு Sat, Sun -3.30 -4.30 PM
ஆரம்பம்: 09.04.2011 சனி (C-2892)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு
கொக்குவில் சந்திக்கும் குளப்பிட்டிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:
0750937296 ராஜா
(4432)

MYWay English இன் ஆசிரியர், அலுவலர், வங்கியாளர், மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம் கட்டணம் : ரூபா 8000/- மட்டும்
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
உயர்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணம்
இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பயிற்சியில் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், GAQ, HNDA, BIT, Academy உட்பட உயர்கல்வி கற்போர் மற்றும் பட்டம் பூர்த்திசெய்தோருக்கு கட்டணம் ரூபா 3000/- மட்டும்
குறிப்பு : பாடசாலைகள் அலுவலகங்கள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட Discount Coupon இனைப்பயன்படுத்தியும் சலுகைக்கட்டணத்தை பெறலாம்
MyWay English 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 2229505 077 33 63 456

கார் விற்பனைக்கு
POWER STEERING.
POWER SHUTTER
A/C PERFECTLY WORKING,
POWER MIRROR.
அனைத்து ஒரிஜினல் வளங்களுடனும் 15-XXXX தொடரிலக்கமுடைய மெற்றாலிக் சில்வர் கலர் கார் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774528818
SM's COMPLEX
824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4404)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.